# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2013
ரூ.10.00



# சாதிவெறிக் கொட்டத்தை மோதி வீழ்த்துவோம்!

# “ஆதிக்க சாதிவெறி பிடித்த வன்னியர் சங்கத்தைத் தடை செய்! அதன் சொத்துக்களைப் பறிமுதல் செய்!!”

## - தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் கண்டன ஆர்ப்பாட்டங்கள்


தருமபுரியில்...

தருமபுரி நத்தம் காலனி, அண்ணாநகர், கொண்டாம்பட்டி பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தொடுக்கப்பட்ட பா.ம.க.வின் வன்னிய சாதிவெறித் தாக்குதலைக் கண்டித்தும், ஆதிக்க சாதிவெறி பிடித்த வன்னியர் சங்கத்தைத் தடை செய்யக் கோரியும், அதன் சொத்துக்களைப் பறிமுதல் செய்யக் கோரியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகளும் மனித உரிமைப் பாதுகாப்பு மையமும் இணைந்து தமிழகமெங்கும் தொடர்பிரச்சார இயக்கங்களையும் கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றன.

பா.ம.க. சாதிவெறியர்களின் தாக்குதலுக்குள்ளான நத்தம், அண்ணாநகர், கொண்டாம்பட்டி கிராமங்களுக்குச் சம்பவம் நடந்த மறுநாளான நவம்பர்-8 அன்று, மனித உரிமைப் பாதுகாப்பு மைய வழக்குரைஞர்களுடன் சென்ற பென்னாரம் வி.வி.மு.வினர், பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து உண்மை நிலவரங்களைக் கேட்டறிந்து ஆறுதல் கூறியதோடு, அம்மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்களையும் வழங்கினர். ‘‘பா.ம.க.வின் சாதிவெறி’’ எனக் குறிப்பாக அம்பலப்படுத்தி சுவரொட்டிகளை ஒட்டிய இவ்வமைப்பினர், 27.11.2012 அன்று தருமபுரி இராஜகோபால் பூங்கா அருகில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இவ்வார்ப்பாட்டம் நடந்து முடிந்த ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, பொது அமைதியைப் பாதுகாப்பது என்ற முகாந்திரத்தில், ‘‘சாதி பெயரைக் குறிப்பிட்டு சுவரொட்டி, பிரசுரங்களை வெளியிடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள்’’ என ஆணை பிறப்பித்தது போலீசு.



சென்னையில்...



‘‘5 மணிநேரம் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்தி நகை, பணமெல்லாம் சூறையாடப்பட்ட பொழுது ஒரு மயிரையும் பிடுங்காத போலீசு, இத்தாக்குதலை கண்டித்து நடைபெறுகிற இந்த ஆர்ப்பாட்டத்தை ஒரு மணிநேரத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென மிரட்டுகிறது’’ என போலீசின் யோக்கியதையை அம்பலப்படுத்தினார், இவ்வார்ப்பாட்டத்தைத் தலைமையேற்று நடத்திய பென்னாகரம் வி.வி.மு. வட்டச் செயலர் தோழர் கோபிநாத். ம.உ.பா. மையத்தின் தருமபுரி மாவட்டச் செயலர் வழக்குரைஞர் ஜானகிராமன், வி.வி.மு.வைச் சேர்ந்த தோழர் ஆம்பள்ளி முனிராஜ் ஆகியோர் பா.ம.க.வின் சாதிவெறியாட்டத்தைக் கண்டித்து உரையாற்றினர். தாக்குதலுக்குள்ளான கிராமங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் பெருந்திரளாக இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

கண்ணெதிரிலேயே தமது வீடு உள்ளிட்ட உடைமைகள் நாசமாக்கப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியில் உடல்நலம் பாதிப்படைந்த, நத்தம் பகுதியைச் சேர்ந்த மங்கம்மாள் 3.12.2012 அன்று மரணமடைந்தார். 8.12.2012 அன்று நடைபெற்ற அவரது நினைவஞ்சலிக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய வி.வி.மு.வைச் சேர்ந்த தோழர் ஆம்பள்ளி முனிராஜ், நாய்க்கன் கொட்டாய் பகுதியில் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் செயல்பட்ட பொழுது, இரட்டைக் குவளைமுறை உள்ளிட்ட வன்கொடுமைகளுக்கு முடிவு கட்டப்பட்டதை நினைவு கூர்ந்து, ‘‘சாதிய அமைப்புக்குள் நின்று

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 28 இதழ்: 3
ஜனவரி 2013

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *முகிலன்*

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# சாதிவெறிக் கொட்டத்தை மோதி வீழ்த்துவோம்!

திராவிடக் கட்சிகளுக்கு மாற்று என்று சொல்லிக் கொண்டு அரசியலில் களமிறங்கிய ராமதாசு, இதுவரை தமிழகம் கண்டிராத பச்சோந்தி என்று அம்பலப்பட்டு, சொந்த சாதியினர் மத்தியிலேயே மதிப்பிழந்து போனதால், தனது அடுத்த ஆயுதமாக ஆதிக்க சாதிவெறியைக் கையிலெடுத்திருக்கிறார். 51 சாதிச்சங்கங்களைக் கூட்டி ''அனைத்து சமுதாயப் பாதுகாப்புப் பேரவை''யை உருவாக்கியிருக்கிறார். சாதி கடந்த திருமணங்கள் அனைத்தையுமே தடுக்கவேண்டுமென்பதும், வன்கொடுமைச் சட்டத்தை முற்றிலுமாக முடக்க வேண்டும் என்பதும்தான் அவர்களது கோரிக்கை.

''வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் புகார் கொடுப்பதற்கு இனி ஒருவனுக்கும் தைரியம் வரக்கூடாது. பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் பெண் குழந்தைகளிடம் சாதியைப் பற்றித் தெளிவாகச் சொல்லுங்கள்'' என்று வெறியுடன் பேசியிருக்கிறார் ராமதாசு. ''ஆலய நுழைவுப் போராட்டம் நடத்த வந்தார்கள். ஒரு லோடு செங்கல் எடுத்துத் தாக்கினோம். வாலைச் சுருட்டிக் கொண்டார்கள்'' என்று ரெட்டியார் சங்கமும், ''கலப்புத் திருமணம்தான் நம் முதல் எதிரி'' என்று மறுமலர்ச்சி முஸ்லிம் லீகும் பேசியிருக்கின்றனர். இந்து மக்கள் கட்சியும் இதில் கலந்து கொண்டு, இந்து என்பவன் எவன் என்று காட்டியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பேசியவற்றுக்காகவே இவர்களை வன்கொடுமைச் சட்டத்தில் உள்ளே வைத்திருக்க வேண்டும். ஆனால் அம்மாவின் அரசை விமரிசித்தாலே அவதூறு சட்டத்தைப் பாய்ச்சும் ஜெ அரசு, இவர்கள் யாரையும் கைது செய்யவோ வழக்குத் தொடரவோ இல்லை. வெளிப்படையான இந்த சாதிவெறிப் பேச்சுகளையும், வன்கொடுமைச் சட்டம் குறித்து ராமதாசு பரப்பும் அபாண்டமான பொய்களையும் ஓட்டுக்கட்சிகள் கண்டிக்கவும் இல்லை. தனிக்குடியிருப்பு, தனிச்சுடுகாடு, தனிக்கிணறு, தனிக்கோயில்கள், தனிக்குவளைகள் ஆகியவை கிராமப்புறங்களில் அமலில் இருப்பதும், தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த ஊராட்சி மன்றப் பிரதிநிதிகளும் தலைவர்களும் அவமதிக்கப்படுவதும் நாடறிந்த உண்மை.

இவற்றுக்கெதிரான போராட்டங்கள் நடக்கும் இடங்களில்கூட அரசு நிர்வாகம் அமைதிப் பேச்சுவார்த்தை என்று நாடகமாடுகிறதே தவிர, வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்வதில்லை. திண்ணியம் போன்ற வழக்குகளிலேயே தீண்டாமைக் குற்றத்தின் கீழ் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை. தற்போது நடைபெற்றுள்ள நத்தம் சாதிவெறியாட்டத்திலும், வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. நாடு முழுவதுமே வன்கொடுமைத் தடுப்புச் சட்ட அமலாக்கத்தின் யோக்கியதை இதுதான்.

சாதி மறுப்பு காதல் திருமணங்களாலும், வன்கொடுமை வழக்குகளாலும் ஆதிக்க சாதியினர் பாதிக்கப்பட்டிருப்பதாக ராமதாசு சித்தரிப்பது, தனது சாதிவெறி அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கான தந்திரம். இதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக மற்ற பிரிவு மக்களிடம் சாதிவெறியைத் தூண்டுகிறார் ராமதாசு. மறுகாலனியாக்க கொள்கைகளுடைய தாக்குதலின் விளைவாக மக்களின் அன்றாட வாழ்க்கையும், தொழில்களும் வெகு வேகமாக அழிக்கப்பட்டு வரும் சூழலில், அவற்றுக்கெதிராகப் போராடாமல் மக்களைத் திசை திருப்பும் சதியே இது. பெரியாருடைய பணியின் காரணமாக, சாதிப்பெயரைப் போட்டுக் கொள்வதே இழிவானது என்ற பொதுக்கலாச்சாரத்தை உருவாக்கியிருக்கும் தமிழகத்தை, மிகவும் கேவலமான நிலைக்கு இழுத்துச் செல்ல முயற்சிக்கின்ற இந்த அருவெறுக்கத்தக்க ஜந்துக்கள் தலையெடுப்பதற்கு முன்னர் நசுக்கப்படவேண்டும்.

# சாதிய அடையாள அரசியல் சாதியையும் தீண்டாமையையும் ஒழிக்குமா?

**சாதி, தீண்டாமையை அகற்ற வேண்டுமானால், இவற்றை நிராக்கரிக்கின்ற ஜனநாயகப் புரட்சியில் மக்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். சாதியின் பெயரால் நடத்தப்படும் அரசியல், சாதியப் பிழைப்புவாதக் கட்சிகளை வலுப்படுத்தவே பயன்படும்.**

''தமிழ்க்குடிதாங்கி'', ''அம்பேத்கர் சுடர்'' என்று விடுதலைச் சிறுத்தைகளால் கொண்டாடப் பட்ட ராமதாசு, தமிழகத்தின் ஆதிக்க சாதிவெறி யர்கள்அனைவருக்கும்தலைவராக அவதரித்திருக் கிறார். ''அனைத்து சமுதாயப் பாதுகாப்பு பேரவை'' என்றொரு அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. சாதி மறுப்புத் திருமணத்தையும் வன்கொடுமை தடைச் சட்டத்தையும் எதிர்த்து ராமதாசு சண்ட மாருதம் செய்கிறார். திருமாவளவனோ, ''ராமதாசு என்னைச்சட்டையைப் பிடித்து இழுத்தாலும் நான் சண்டைக்குப் போகமாட்டேன்'' என்கிறார்.

ராமதாசும் காடுவெட்டி குருவும் தூண்டிவிட்ட சாதிவெறி ஆங்காங்கே தாழ்த்தப்பட்ட மக்களைக் காவு வாங்குகிறது. சேத்தியாதோப்பு பகுதியில், வன்னியர்சாதிப் பெண்ணைக் காதலித்த கோபால கிருஷ்ணன் என்ற மாணவனைக் கழுத்தை அறுத்தே கொலை செய்து, குட்டைக்குள் வீசியிருக் கிறார்கள் வன்னிய சாதிவெறியர்கள். ஒரு வாரத் திற்குப் பின்னர், அழுகி நாறிய நிலையில் அந்த இளைஞனின் உடல் கண்டெடுக்கப்பட்டிருக் கிறது. சாதி மறுப்புக் காதலுக்குப் பழிவாங்குவதற் காக, காந்தளவாடி கிராமத்தைச் சேர்ந்த பிரியா என்ற தாழ்த்தப்பட்ட பெண் வன்னிய சாதிவெறி யர்களால் கொல்லப்பட்டிருக்கிறாள்.

திருமாவளவன் மட்டும் ராமதாசுடன் சமர சத்தை நாடுகிறார். ''இப்போது அமைதி காப்பது தான்வீரம்'' என்கிறார். புதியதலைமுறை தொலைக் காட்சிக்கு நவம்பர்-24 அன்று திருமா அளித் திருக்கும் பேட்டி, அவர் சந்தர்ப்பவாத அரசியலில் மூழ்கி முத்தெடுத்தவர் என்று காட்டுகிறது.

தருமபுரி தாக்குதல் ராமதாசுக்குத் தெரியாமல் நடந்திருக்கும் என்றுதான் அவர் முதலில் நினைத் தாராம். இலண்டனிலிருந்து கோ.க. மணியுடனும் டாக்டர்செந்திலுடனும் தொலைபேசியில் பேசிய போது, 'இந்தத் தாக்குதலில் பா.ம.க.வுக்குச் சம் மந்தமே இல்லை' என்று அவர்கள் சொன்னார் களாம்; இவரும் நம்பிவிட்டாராம். என்ன நடந்தது என்று ஒருமுறைகூட அவர் தன் சொந்தக் கட்சிக் காரர்களிடம் கேட்கவில்லை போலும். நம்பு வோம்.

''சாதி மறுப்புத் திருமணம் செய்தால் வெட்டுவேன் என்று மாமல்லபுரத்திலேயே காடுவெட்டி குரு ஏற்கெனவே பேசி யிருக்கிறாரே, உங்களுக்குத் தெரியாதா?'' என்று பேட்டியாளர் ஜென்ராம் கேட்கிறார். ''அது பற்றி கோ.க. மணியிடம் கேட் டேன். குருவை டாக்டரய்யா கண்டித்ததாகச் சொன்னார். நம் பினேன்'' என்கிறார்.

கடைசியாக ராமதாசு தனது சொந்த வாயால் ஊடகங்களில் பேசிய பின்னர்தான், 'இது மேலிருந்தே திட்டமிட்டு நடத்தப் படுகிறது' என்ற உண்மை திருமாவுக்குப் புரிந்ததாம். அதாவது, விடுதலைச் சிறுத்தைகளை ராமதாசு தாக்குகிறார் என்பதை உலகமே பார்த்துவிட்டதால், இனிமேலும் வலிக் காத மாதிரி நடிக்க முடியாது என்பது திருமாவுக்குப் புரிந்து விட்டது!

அதன் பிறகும் அவருக்குக் கோபம் வரவில்லை. திருப்பி அடிப்பதெல்லாம் இருக்கட்டும். ''ராமதாசு அம்பேத்கர் சுடர் அல்ல, வன்னிய தீவட்டி'' என்று சாடியிருக்கலாம். ராமதாசை யும் குருவையும் வன்கொடுமைச் சட்டத்தில் கைது செய்யக் கோரிப் போராடியிருக்கலாம். செய்யவில்லை. ''வன்னியப் பெண்கள் வயிற்றில் தலித் கரு வளரவேண்டும் என்று நான் பேசியதாக பொய்ப்பிரச்சாரம் செய்கிறார்கள். ஒரு இடத்தி லாவது நான் அப்படிப் பேசியதாக நிரூபித்தால், தூக்கில் தொங்கத் தயார்'' என்று தருமபுரி ஆர்ப்பாட்டத்தில் ஆவேசமாக தன்னிலை விளக்கம் அளிக்கிறார் திருமா.

ஆனால், தனது கட்சியினர் மீது கூறப்படும் குற்றச்சாட்டை ஆவேசமாக மறுக்க அவர் முயலவில்லை. 'காதல் திருமணங் களைப் பிரித்து காசு பறிப்பதாகச் சொல்கிறீர்களே, அப்படி ஒரேயொரு ஆதாரமாவது காட்ட முடியுமா?' என்று கேள்வி எழுப்பவில்லை. 'எங்கள் கட்சிக்காரர்கள் கட்டப்பஞ்சாயத்து செய்ததாகவோ, வன்கொடுமைச் சட்டத்தை வைத்துப் பணம் பறித்ததாகவோ ஒரு ஆதாரம் கொடுங்கள், அரசியலை விட்டே விலகுகிறேன்' என்று சவால் விடவில்லை.

மாறாக, சமரசத்திற்கு இப்போதும் தயாராக இருப்பதாக அந்த பேட்டியின் முடிவில் பிரகடனம் செய்கிறார். ''தம்பி, தேர்தல் அரசியல் வேண்டாம்; வா, நாம் இரு சமூக மக்களின் நல்லிணக்கத்துக்காக, உழைக்கும் மக்கள் ஒற்றுமைக்காகப் பாடுபடுவோம் என்று டாக்டரய்யா என்னை அழைத்தால், இந்த நிமிடமே கட்சியை விட்டுவிட்டு வரத் தயார். நாடாளு மன்ற அரசியல் எனக்குத் தேவையில்லை'' என்கிறார். ஆனந்த விகடன் பேட்டியில் ராமதாசுக்கு அம்பேத்கர் சுடர் விருது

கொடுத்ததை நியாயப்படுத்துகிறார். ''எதிர்காலத்தில் தலித்துகளுக்கு ஆதரவாக ராமதாசு நடந்து கொண்டால், மீண்டும் அவருக்கு விருது கொடுப்போம்'' என்கிறார்.

சமூக நல்லிணக்கத்தைப் பேணுவதற்காகவும், தமிழர் ஒற்றுமைக்காகவுமே தான் அமைதி காப்பதாகவும், பொறுப்புடன் நடந்து கொள்வதாகவும் தனது அணுகுமுறைக்கு விளக்கம் சொல்கிறார் திருமாவளவன். ஆனால், விடுதலைச் சிறுத்தைகளின் டிஜிட்டல் பானர் முழக்கங்களையும், மேடைப் பேச்சுகளையும் பார்த்து, திருமாவைப் போர்க்குணத்தின் உருவமாக எண்ணிக் கொண்டிருந்த இளைஞர்கள் திகைக்கிறார்கள். இப்படியொரு சரணடைவை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

### ராமதாசிடம் திருமா சரணடைவது ஏன்?

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தன்னைத்தானே சித்தரித்துக் கொள்வதைப் போலவோ, அல்லது முற்போக்காளர்கள் எனப்படுவோர் சிலர் நம்பிக் கொண்டிருப்பதைப் போலவோ, தலித் விடுதலைக்கான அமைப்பு அல்ல. மற்றெல்லா ஓட்டுக்கட்சிகளையும் போலவே, அது ஒரு சாதிய பிழைப்புவாதக் கட்சி. வன்னிய மக்களின் பெயரைச் சொல்லி பா.ம.க. என்ற பிழைப்புவாதக் கட்சியை ராமதாசு நடத்துவதைப் போலவே, தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு பிரிவினருடைய பிரதிநிதியாகத் தன்னைக் கூறிக்கொண்டு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் அரசியல் பிழைப்பு நடத்துகிறது.

பா.ம.க.வால் ஏமாற்றப்படும் வன்னிய மக்கள் ஆதிக்க சாதி; சிறுத்தைகளால் ஏமாற்றப்படும் மக்கள் ஒடுக்கப்பட்ட சாதி என்பதுதான் வேறுபாடு. பா.ம.க.வுக்கும் சிறுத்தைகளுக்கும் வேறெந்த வேறுபாடும் இல்லை. 2001 தேர்தலில் தி.மு.க.வும் பா.ம.க.வும் கூட்டணி அமைத்திருந்தபோது, திருமாவளவன் போட்டியிட்ட தொகுதியில் பல ஊர்களில் நூற்றுக்கணக்கான வீடுகள் கொளுத்தப்பட்டன; நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் தாக்குதலில் காயம்பட்டனர். அப்போது, ''இந்தச் சாம்பல் மேட்டின்மீது நின்று சொல்கிறேன். கொளுத்தியவர்களுடன் இனி கூட்டணி கிடையாது'' என்று திருமா அறிவித்தார்.

அன்று அப்படிச் சொல்லிவிட்டு மறுபடியும் பா.ம.க., தி.மு.க.-வுடன் கூட்டுச் சேர்ந்த சந்தர்ப்பவாதம் பற்றிக் கேட்டால், ''அம்பேத்கர் ஆயுதப் போராட்டம் நடத்தச் சொல்லவில்லை. இருக்கின்ற அரசமைப்பில் பங்கேற்று அரசதிகாரத்தைப் பெறுமாறுதான் கூறியிருக்கிறார்'' என்று கொட்டைப்பாக்குக்கு விலை சொல்கிறார். 'தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் தலித்துகளை மைய நீரோட்டத்தில் இணைப்பதற்காகத்தான் வலியச் சென்று கைகுலுக்க வேண்டியிருப்பதாக' நியாயப்படுத்துகிறார்.

தனிக்குடியிருப்பு, தனிக்கிணறு, தனிக்குவளை, தனிச்சுடுகாடு என்று தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை ஊரின் மைய நீரோட்டத்தில் சேர்த்துக் கொள்வதாக எந்தக் கட்சியாவது வாக்குறுதி கொடுத்ததா, அல்லது கூட்டணிக்கான முன்நிபந்தனையாக அப்படி ஏதேனும் ஒன்றை திருமா முன்வைத்திருக்கிறாரா? எதுவும் கிடையாது.



குச்சு கொளுத்தி ராமதாசுக்கு அம்பேத்கர் சுடர் விருது வழங்கும் திருமாவளவன். (கோப்புப் படம்)

> **திருமா ராமதாசு கூட்டணி, வன்னியர் தாழ்த்தப்பட்டோரிடையான சமூக உறவில் எந்த சமத்துவத்தையும் கொண்டு வந்து விடவில்லை. வசூல் வேட்டை நடத்தவும், கட்டப்பஞ்சாயத்து செய்யவும், மற்றெல்லா ஓட்டுப்பொறுக்கிகளும் பெற்றிருக்கும் ஜனநாயக உரிமையை விடுதலைச் சிறுத்தைக் கட்சியின் 'தளபதிகளுக்கு'த்தான் பெற்றுத்தந்தது. மக்களைப் பொருத்தவரை தனிக்குடியிருப்பும் தனிச்சுடுகாடும் அப்படியேதான் இருந்தன.**

சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும்போதே, அரசியலில் தலித் பிழைப்புவாதிகளை காங்கிரசு, பா.ஜ.க., உள்ளிட்ட ஆளும் வர்க்கக் கட்சிகள் அனைவரும் மைய நீரோட்டத்தில் இணைத்துதான் வைத்திருக்கிறார்கள். 'இப்படிப் பல்வேறு கட்சிகளிலும் தலித் வாக்குகள் சிதறடிக்கப்படுவதனால்தான் தலித்துகள் அரசியலதிகாரம் பெறமுடியவில்லை' என்று கூறித் தொடங்கப்பட்டவைதான் விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட தலித் கட்சிகள்.

வன்னியர்களிடம் இதே வாதங்களைச் சொல்லித்தான் ராமதாசும் தனிக்கட்சி தொடங்கினார்.

பல்வேறு கட்சிகளிலும் உள்ள வன்னியர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரித்துத் தனியாக ஒரு சாதிய வாக்கு வங்கியை உருவாக்கிக் கொண்டு, தி.மு.க., அ.தி.மு.க. போன்றோருடன் பேரம் பேசுவதுதான் பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட எல்லா சாதிக் கட்சிகளின் நோக்கமும். தங்கள் சாதி வாக்காளர்களிடம் எந்த அளவுக்குச் சாதி உணர்வைத் தூண்ட முடிகிறதோ, அந்த அளவுக்கு இவர்கள் தமது சந்தர்ப்பவாதத்தை மறைத்துக் கொள்ள முடியும். தமது சாதி வாக்குகளை உறுதி செய்து கொள்ள முடியும்.

## நீயும் நானும் ஒண்ணு, மக்கள் வாயில் மண்ணு!

இருப்பினும், திருமாவுக்கு என்ன காரணத்துக்காகவோ ராமதாசுடன் ஒரு நல்லிணக்கம் அவசரமாகத் தேவைப்படுகிறது. அதற்காகக் கொளுத்தப்பட்ட மக்களுக்கும் கொளுத்திய கிரிமினல்களுக்கும் நல்லிணக்கம் பேசுகிறார். ராமதாசோ, ''நான் இருப்பதனால்தான் வடதமிழகம் அமைதியாக இருக்கிறது'' என்று வெளிப்படையாகவே மிரட்டுகிறார்.

திருமா - ராமதாசு கூட்டணி, வன்னியர் - தாழ்த்தப்பட்டோரிடையேயான சமூக உறவில் எந்த சமத்துவத்தையும் கொண்டுவந்து விடவில்லை. வசூல் வேட்டை நடத்தவும், போலீசுக்குப் புரோக்கர் வேலை பார்க்கவும், கட்டப் பஞ்சாயத்து செய்யவும், காண்டிராக்ட் எடுக்கவும் மற்றெல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் பெற்றிருக்கும் 'ஜனநாயக உரிமை'யை விடுதலை சிறுத்தைக் கட்சியின் 'தளபதிகளுக்கு'த்தான் பெற்றுத் தந்தது. தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களுக்கு எதையும் பெற்றுத் தரவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களைப் பொருத்தவரை தனிக்குடியிருப்பும் தனிச்சுடுகாடும் அப்படியேதான் இருந்தன. அவ்வாறிருக்கும்போதே தாழ்த்தப்பட்டவர்களை ஏமாற்றுவதற்குத்தான் அம்பேத்கர் சிலை திறப்பு, தலித்துக்கு மந்திரி பதவி போன்ற ராமதாசின் தந்திரங்கள். பதிலுக்கு வன்னியர்களை தாஜா செய்வதற்குத்தான் ராமதாசுக்கு திருமா வழங்கிய தமிழ்க்குடிதாங்கி, அம்பேத்கர் சுடர் பட்டங்கள்.

'குச்சு கொளுத்தி' என்று தாழ்த்தப்பட்ட மக்களால் வெறுப்புடன் ஏசப்பட்ட ராமதாசுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களையே ஓட்டுப்போட வைத்ததும், இப்போது நத்தம் காலனியைக் கொளுத்திய பின்னரும், தமிழர் ஒற்றுமை என்று கூறிக்கொண்டு ராமதாசுக்கு நல்லிணக்கத் தூது விடுவதும்தான் திருமாவின் சாதனை என்று சொல்லவேண்டும்.

## மறுகாலனியாக்கம் பெற்றெடுத்த புதிய புல்லுருவிகள்!

நத்தம் தாக்குதலைக் கண்டித்து சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் படைப்பாளிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பலரும் கலந்து கொண்டு பேசினர். நெருப்பு, கொள்ளை, துயரம், கண்ணீர் போன்ற சொற்கள் ஒலிபெருக்கியிலிருந்து தெறித்த வண்ணம் இருந்தன. ஆர்ப்பாட்டத்திற்கு 'அண்ணன் திருமா'வுடன் வந்திறங்கி இருபுறமும் அணிவகுத்து நின்ற குவாலிஸ், இன்னோவா, சுமோ போன்ற வெள்ளை வண்டிகளில் சாய்ந்தபடி, மினிஸ்டர் ஒயிட்டும், கழுத்தில் தங்கத் தாம்புக் கயிறு, கையில் பிரேஸ்லெட்டும் அணிந்த சிறுத்தைகள் பலர் நின்றிருந்தனர். அவர்கள் வாயிலிருந்து 'லட்சம், கிரவுண்டு, அப்ரூவ்டு, எம்.எல்.ஏ' போன்ற சொற்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. இந்த வர்க்கத்தினரை அதிகாரத்துக்கு அழைத்துச் செல்வதைத்தான் தலித்துகளை அதிகாரத்துக்கு அழைத்துச் செல்வது என்கிறார் திருமா.

ரியல் எஸ்டேட், மணல் கொள்ளை, லேபர் காண்டிராக்ட், உரிமங்கள் பெற்றுத் தருதல், தண்ணீர் வியாபாரம், செக்யூரிட்டி ஏஜென்சி, மெட்ரிக் பள்ளி, சுயநிதிக் கல்லூரி, வாடகைக்கார் தொழில், நிலம் சார்ந்த கட்டப் பஞ்சாயத்துகள், பன்னாட்டு நிறுவனங்களுக்கான துணைத்தொழில்கள், கருங்காலி தொழிற்சங்கங்கள் போன்று பொறுக்கித் தின்னவும் கொள்ளையடிக்கவுமான பல வாய்ப்பு

ராமதாசு தலைமையில் அணி திரண்டுள்ள ஆதிக்க சாதிவெறியர்களின் அனைத்து சமுதாயப் பாதுகாப்பு பேரவை சென்னையில் நடத்திய கூட்டம்.



களை மறுகாலனியாக்க கொள்கைகள் திறந்துவிட்டிருக்கின்றன. இத்தகைய தொழில்களில் ஈடுபடுபவர்கள்தான் வி.சி. கட்சியின் தூண்கள். இவர்கள்தான் டிஜிடல் பானர் வைப்பவர்கள், தங்கக்காசு கொடுப்பவர்கள், கூட்டத்துக்கு ஆள் திரட்டுபவர்கள், அண்ணன் வந்தால் முன்னும் பின்னும் 50 வண்டிகளில் புழுதி கிளப்பிக்கொண்டு செல்பவர்கள்.

இதேவகையான தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பா.ம.க. உள்ளிட்ட பிற கட்சிகளின் உள்ளூர்த் தலைவர்களோடு இவர்கள் தொழில் கூட்டாளிகளாக, நண்பர்களாக, அன்றாடம் போலீசு ஸ்டேசன் முதல் கலெக்டர் ஆபீஸ் வரையில் பல இடங்களில் பழகுபவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரின் வர்க்க நலனும் ஒன்றுதான். தொழில் தேவைக்காக வெவ்வேறு கட்சிகளில் இருக்கிறார்களேயன்றி, வேறு எந்தக் கொள்கையாலும் இவர்கள் பிரிந்து நிற்கவில்லை.

ஒரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலோ, பொதுப் பணித்துறையிலோ இலஞ்சத் தொகை கீழிருந்து மேல் வரை தீர்மானிக்கப்பட்ட விகிதாச்சாரத்தின் அடிப்படையில் சுமுகமாகப் பிரித்துக் கொள்ளப்படுவதைப் போல, தனியார்மய-தாராளமயக் கொள்கைகள் வழங்கியுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி அடிக்கின்ற கொள்ளையை இவர்கள் தமக்குள் சுமுகமாகப் பிரித்துக் கொள்கிறார்கள். தேர்தல் அரசியல் கூட்டணி மாறுவதால், சில நேரம் இந்த அணியிலும், சில நேரம் அந்த அணியிலும் இருக்க நேர்ந்தாலும், இவர்களுடைய உறவின் சமநிலை அநேகமாகக் கெடுவதில்லை.

சென்ற மே மாதம் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வின் தோல்வியைத் தொடர்ந்து, ஜூலை மாதத்திலேயே திராவிடக் கட்சிகள் அல்லாத மூன்றாவது அணி அமைக்கப் போவதாக அறிவித்தார் ராமதாசு. உடனே அதை வழிமொழிந்தார் திருமாவளவன். தன்னை திடீரென்று ராமதாசு கழற்றிவிடுவார் என்பதைத்தான் திருமாவளவன் எதிர்பார்க்கவில்லை போலும். உழைத்துக் கஞ்சி குடிக்கின்ற தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் ராமதாசுடன் சமரசத்தைக் கோரவில்லை. விடுதலைச்சிறுத்தைகள் நடத்தும் அரசியல் இம்மக்களுடைய நலனுக்கானதும் அல்ல.

> “ராமதாசே ஊடகங்களில் பேசிய பின்னர்தான் ‘‘இது மேலிருந்தே திட்டமிட்டு நடத்தப்படுகிறது’’ என்ற உண்மை திருமாவுக்குப் புரிந்ததாம். அப்புறமும் அவருக்கு கோபம் வரவில்லை... ராமதாசையும் குருவையும் வன்கொடுமை சட்டத்தில் கைது செய்யக் கோரி போராடியிருக்கலாம். செய்யவில்லை. மாறாக, சமரசத்திற்கு இப்போதும் தயாராக இருப்பதாக பிரகடனம் செய்கிறார்.”

### சாதிய பிழைப்புவாதத்தைப் புனிதப்படுத்திய அடையாள அரசியல்!

வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய இந்தச்சாதி அரசியலின் இரண்டாவது சுற்று, 90-களின் தொடக்கத்தில் ஆரவாரமாகத் தமிழகத்தில் தலையெடுத்தது. வன்னியர் வாக்குவங்கியை மையமாக வைத்துப் பாட்டாளி மக்கள் கட்சியைத் தொடங்கிய ராமதாசு, அம்பேத்கர் - பெரியார் - மார்க்ஸ் ஆகியோரது படங்களை உறுப்பினர் அட்டையில் போட்டுக் கொண்டதன் மூலம் சாதி-தீண்டாமை ஒழிப்பு, தமிழ்த்தேசிய


வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் உள்ளே தள்ள வேண்டிய காடுவெட்டி குருவுக்குப் பொன்னாடை! (கோப்புப் படம்)

> பா.ம.க.வை தீண்டாமை ஒழிப்பு, தமிழ்த்தேசிய விடுதலை, வர்க்க விடுதலை போன்ற எல்லா சரக்குகளும் கிடைக்கின்ற பல்பொருள் அங்காடியாக சந்தைப்படுத்தினார் ராமதாசு. அப்பட்டமான சாதிக்கட்சி என்று தெரிந்தும், சமூக மாற்றத்துக்கு குறுக்கு வழி தேடிக் கொண்டிருந்த சில முன்னாள் புரட்சியாளர்களும், பின் நவீனத்துவ அறிவுத்துறையினரும், நரிக்கு சாயம் பூசிப் பரியாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.


அ.மார்க்ஸ்

விடுதலை, வர்க்க விடுதலை போன்ற எல்லா சரக்குகளும் கிடைக்கின்ற பல் பொருள் அங்காடியாக பா.ம.க.வைச் சந்தைப்படுத்தினார். அப்பட்டமான சாதிக் கட்சி என்று தெரிந்தபோதும், சமூக மாற்றத் துக்குக் குறுக்குவழி தேடிக் கொண்டிருந்த சில முன்னாள் புரட்சியாளர்களும், பின் நவீனத்துவ அறிவுத்துறையினரும், நரிக்கு சாயம் பூசிப் பரியாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

பின் நவீனத்துவத்தின் நுண் அரசிய லானது, சாதி, உட்சாதி, இனக்குழு, பாலினம் போன்ற அடையாளங்களை முதன்மைப்படுத்தி, வர்க்கப் போராட்டம் என்ற கருத்தாக்கத்தையும் கம்யூனிசத்தையும் தூற்றியது. ஏகாதி பத்தியத்தால் உலகம் முழுவதும் ஸ்பான்சர் செய்யப்பட்டு, தன்னார்வக் குழுக்களால் கடைவிரிக்கப்பட்ட இந்த அடையாள அரசியலை, தலித்தியம், தலித் அரசியல் என்ற பெயர்களில் பின் நவீனத்துவ அறிஞர்கள் இங்கே முழங்கினர்.


கல்விமணி

'கம்யூனிஸ்டு கட்சிகளும், நக்சல்பாரிக் கட்சியும் தலித்துகளை காலாட்படையாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. அக்கட்சி களிலிருந்தெல்லாம் தலித்துகள் வெளி யேறித் தமக்கென தனிக்கட்சி தொடங்க வேண்டும். தலித்துகளின் உணர்வுகளைத் தலித் அல்லாதவர்கள் ஒருக்காலும் உணர முடியாது. தீண்டாமைக்கு எதிராகத் தலித்துகளைத்தவிர, வேறு யாரும் போராடு வார்கள் என்று நம்ப முடியாது. வர்க்கம் என்ற பேரடையாளத்துக்குள் சாதியை அடக்குவதால் கம்யூனிசம் சாதியை ஒழிக்காது. கம்யூனிஸ்டுகள் அதற்காகப் போராடியதுமில்லை. எனவே, தலித்துகள் சிதறிக் கிடக்காமல் தனியொரு வாக்குவங்கியாகத் திரள வேண்டும். போலி ஜன நாயகம் என்று கூறி இந்தத் தேர்தலை புறக்கணிப்பது தவறு. தேர்தல் அரசியல் மூலம் கைப்பற்றும் அதி காரத்தின் மூலமும், கல்வி - இட ஒதுக்கீடு முதலான வழிகளில் பொருளாதார முன் னேற்றம் அடைவதன் மூலமாகவும்தான் தலித்துகள் விடுதலை பெற முடியும்' - இவையெல்லாம் அவர்கள் மேற்கொண்ட பிரச்சாரங்கள்.


ரவிக்குமார்

''நாய்க்கன் கொட்டாய் பகுதியில் நக்சல் பாரிகளின் செல்வாக்கு இருந்தவரை சாதி அரசியல் தலையெடுக்க முடியவில்லை. அவர்கள் இல்லாத காரணத்தினால்தான் இன்று இத்தாக்குதல் நடந்திருக்கிறது'' என இன்றைக்கு நத்தம் காலனி மக்கள் கூறு வதை இந்த இடத்தில் பொருத்திப் பார்க்க வேண்டும்.

சாதி அமைப்பு என்பது ஒரு ஜனநாயக விரோத நிறுவனம். சாதி ஆதிக்கமும் தீண்டாமையும் தவறு என்று ஆதிக்க சாதி உழைக்கும் மக்களை உணர வைத்து, சாதிக்கு எதிராக அவர்களைப் போராட வைப்பதுதான் ஜனநாயகப் புரட்சியின் கடமை. ஆனால், அடையாள அரசியலோ, 'மற்றதன் இருப்பை அங்கீகரிப்பது' என்று கூறிக் கொண்டு எல்லா சாதியினரும் தத்தம் அடையாளத்தைப் பேணிக் கொள்வதை ஒரு ஜனநாயக உரிமையாகக் கௌரவப்படுத்தியது.




வாழும் பெரியார் என திருமாவை அன்று பாராட்டிய ராமதாசுக்கு இன்று நன்றி தெரிவிக்கும் விடுதலைச் சிறுத்தைகள்: ''அடங்க மறு'' என்பவர்கள் அடக்கி வாசிப்பது ஏன்?

அதே நேரத்தில், 'சாதி அடையாளத்தைத் துறந்து பணியாற்றும் கம்யூனிஸ்டுகளை நம்பாதே' என்று தலித் மக்களுக்கு அறிவுறுத்தியது. 'மாயாவதி, பஸ்வான் உள்ளிட்ட அப்பட்டமான தலித் பிழைப்புவாதிகளைக்கூட யாரும் விமர்சிக்கக் கூடாது. விமர்சிப்பவர்கள் ஆதிக்க சாதிக்காரர்களாகவோ, அவர்களது எடுபிடிகளாகவோதான் இருக்க முடியும். தீண்டாமைக்குரிய தீர்வை ஒரு தலித்தைத் தவிர வேறுயாரும் கூறமுடியாது. தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தலித்தைத் தவிர வேறு யாரும் தலைமை தாங்க முடியாது, கூடாது' என்றெல்லாம் பேசி, மற்ற சாதிகளில் பிறந்த ஜனநாயக சக்திகளை எதிர்நிலைக்குத் தள்ளியது தலித் அரசியல். பெரியாரைத் தலித் விரோதியாகச் சித்தரித்தார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ரவிக்குமார்.

இவ்வாறு, ஒரு மனிதன் கொண்டிருக்கும் கொள்கை, அவனது நடைமுறை ஆகியவற்றைப் புறந்தள்ளி விட்டு, 'அவனுடைய பிறப்பை முதன்மைப்படுத்தியதன் மூலம்', அடையாள அரசியல் பார்ப்பனியத்தை அப்படியே வழிமொழிந்தது. உழைக்கும் வர்க்கத்தைச் சாதிரீதியாகக் கூறு போடுவது, கம்யூனிஸ்டு மற்றும் புரட்சிகர இயக்கங்களின் மீது தலித் இளைஞர்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுத்துவது என்ற ஆளும் வர்க்கத் திட்டத்தை நிறைவேற்றுவதே இதன் நோக்கமாக இருந்தது. 'நம்ம சாதிக்காரனுக்கு ஓட்டுப் போடு' என்று பச்சையாகக் கேட்கும் ஓட்டுப் பொறுக்கிகளின் சாதி அரசியலையே, பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் பம்மாத்து மொழியில், தன்னார்வக் குழுக்களின் தத்துவ விசார தோரணையில் முன்வைத்தது அடையாள அரசியல். மார்க்சிய - லெனினிய புரட்சிகர அரசியலிலிருந்து வெளியேறிய எஸ்.என்.நாகராசன், எஸ்.வி.இராஜதுரை, ஞானி, நிறப்பிரிகை குழுவினர் முதலானோரெல்லாம் அடையாள அரசியலில் தான் தஞ்சம் புகுந்தனர்.

### சாதி சமத்துவம் என்பது சாத்தியமா?

இதன்படி, சாதியைக் கூறிக்கொள்வது நேர்மையான நடவடிக்கையாக போற்றப்பட்டது. ''நான் வன்னியன் என்பதில் பெருமை கொள்கிறேன்'' என்று அறிவித்தார் கவிஞர் பழமலய் (இன்றைக்கு அவர் ராமதாசின் கூற்றை அப்படியே வழிமொழிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது). பின் நவீனத்துவ அறிஞர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட மருத்துவர் ஐயாவோ, 'காலையில் வன்னியராக இருந்து அக்கினி சட்டி கொடி ஏற்றுவது, மாலையில் தலித் விடுதலைக்காக அம்பேத்கர் சிலை திறப்பது' என்று பொளந்து கட்டினார்.

அடையாள அரசியல், சாதியை மட்டுமின்றி, உட்சாதி அடையாளங்களையும் போற்றிக் கொண்டாடியது. சாதி அடையாளங்களைப் பேணிக்கொண்டே, சாதி சமத்துவத்தைக் கடைப்பிடிப்பதுதான் ஜனநாயகம் என்று வியாக்கியானம் செய்தது. மொத்தத்தில் 'சுயநலம், சுயசாதி அபிமானம், பிழைப்புவாதம், ஆளும் வர்க்க நிறுவனங்களை நத்திப் பிழைப்பது, கட்சி தாவுவது, பொறுக்கித்தனங்கள்' போன்ற நடவடிக்கைகள் தான் உண்மையான கலகங்கள் என்றும், 'புரட்சி, தியாகம், சாதி ஒழிப்பு, வர்க்கப் போராட்டம்' போன்ற கருத்துகள் தலித் மக்களை ஏமாற்றுவதற்கு, கம்யூனிசப் புரட்சியாளர்கள் கடைவிரிக்கும் 'பெருங்கதையாடல்கள்' என்றும் பிரச்சாரம் செய்தது. எனவே, இத்தகைய அமைப்புகளிலிருந்து 'தப்பித்து' வெளியே வருமாறு தலித்துகளை அறைகூவியது.

தலித் மக்களை இப்படித் தப்பிக்கச் சொல்லி அறிவுறுத்தியவர்களில் ஒருவர்தான் பின்னாளில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் எம்.எல்.ஏ. பதவியைக் கைப்பற்றியவரும், சமீபத்தில் தனது மகன் திருமணத்தை மருத்துவர் ஐயா தலைமையில்

நடத்தியவரும், இப்பொழுதும் நத்தம் தாக்குதலுக்கு நக்சல்பாரிகளைக் குற்றம் சாட்டி அவதூறு செய்து கொண்டிருப்பவருமான இரவிக்குமார். அவர் 'தப்பி' விட்டார், அவருடன் சேர்ந்து இவற்றையெல்லாம் பிரச்சாரம் செய்த நிறப்பிரிகை அறிஞர்களும் 'தப்பி' விட்டார்கள். அடையாள அரசியல் வைத்த நெருப்பிலிருந்து நத்தம் மக்கள்தான் தப்ப முடியவில்லை.

சாதி என்ற அடையாளத்தின் சாரமே ஏற்றத்தாழ்வுதான். படிக்கட்டில் எத்தனாவது படி என்பதுதான் சாதி என்ற அடையாளத்தின்சாரம். சமமான படி இருக்க முடியாது. சாதி சமத்துவமும் இருக்க முடியாது. இதனால்தான் பட்டியல் இன மக்களைக் குறிப்பதற்கு 'தலித்' என்ற சொல்லைப் பொதுவாகப் பயன்படுத்திக் கொண்டாலும், 'தலித் ஒற்றுமை' என்பது கானல் நீராகவே இருந்து வருகிறது. தமிழகத்தில் பள்ளர், பறையர், அருந்ததியர் என்ற மூன்று முக்கியப் பிரிவினரைக் கூட 'தலித்' என்ற பெயரில் ஒன்றுபடுத்த முயலவில்லை. 'நாங்கள் தலித் அல்ல, தேவேந்திர குலம்' என்கிறார்கள் பள்ளர் சமூகத்தினர். அருந்ததியர் சமூகத்துப் பையனைக் காதலித்த பறையர் சமூகத்துப் பெண் சொந்த சாதிக்காரர்களாலேயே கொல்லப்படுகிறாள். திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்றோர்தங்கள்கட்சியினரின் உட்சாதி மேட்டிமைத் தனத்துக்குத் துணையாகத்தான் நின்று வருகின்றனர். இதனை ஒழிக்க முயன்றால் இவர்களது கட்சியே ஒழிந்துவிடும் என்பதே உண்மை.

> பின்நவீனத்துவத்தின்நுண் அரசியலானது, சாதி, உட் சாதி, இனக்குழு, பாலினம் போன்ற அடையாளங்களை முதன்மைப் படுத்தி, வர்க்கப் போராட்டத்தையும்கம்யூனிசத் தையும்தூற்றியது. ஏகாதிபத்தி யத்தால் உலகம் முழுவதும் ஸ்பான்சர் செய்யப்பட்டு, தன்னார்வக்குழுக்களால் கடை விரிக்கப்பட்ட இந்த அடையாள அரசியலை, தலித்தியம் என்ற பெயரில் பின் நவீனத்துவ அறிஞர்கள் இங்கே முழங்கினர்.

### மங்கும் சாதியை புதுப்பிக்கும் சாதிய பிழைப்புவாதம்!

மொத்தத்தில், சமூகத்தின் வளர்ச்சிப்போக்கில் பண்பாட்டுரீதியாக மெல்ல மங்குகின்ற சாதி உணர்வை, சாதிய பிழைப்புவாத வாக்கு வங்கி அரசியல் புளி போட்டு விளக்கிப் புதுப்பித்திருக்கிறது. அடையாள அரசியல், சாதி மற்றும் உட்சாதி உணர்வுகளுக்குக் கௌரவமும் அந்தஸ்தும் தேடித்தந்திருக்கிறது. இதன் தொடர்விளைவாக, ஒவ்வொரு சாதியிலும் உட்சாதியிலும் உள்ள படித்த நடுத்தர வர்க்கமும் மேட்டுக்குடி வர்க்கமும் முடிந்தவரை பார்ப்பனப் பண்பாட்டைத் தழுவுவதன் மூலம் தன்னை மேல்சாதியாகக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறது. இராசராசன் மள்ளர், நந்தன் அரசன் போன்ற வரலாற்றுக் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்படுகின்றன. வருங்கால முதல்வர் ஆக விரும்புகின்ற சாதியினர் அனைவரும் தாங்கள் நேற்றைய முதல்வர் பரம்பரை என்று கூறிக்கொள்ளவே விரும்புகிறார்கள். சாதிப் பெருமிதம் கெட்டிப்படுகிறது.


புதுச்சேரியில் நடந்த ''போராளித் தலைவனுக்கு பொன் வழங்கும் விழா''. (கோப்புப் படம்)

விவசாயம் அழிந்து, மறுகாலனியாக்கத்தால் சிதறடிக்கப்பட்டு, முறுக்கு போடவும் மூட்டை தூக்கவும் தோட்ட வேலை செய்யவும் மாநிலம் மாநிலமாக ஓடிக்கொண்டிருக்கும் கள்ளருக்கும், முத்தரையருக்கும், வன்னியருக்

கும், பள்ளருக்கும் ஒரு மயக்கத்தைக் கொடுக்கும் போலிப் பெருமித அடையாளமாக இப்போது சாதி புதுப்பிக்கப்படுகிறது. தேவர் ஜெயந்தி, மகாபலி புரம் விழா போன்றவையெல்லாம் ஆண்டுதோறும் அவர்களுக்கு ஏற்றப்படும் மயக்க ஊசிகள். தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் காரணமாகத் தோன்றியிருக்கும் புதிய தரகு வர்க்கங்கள் தான் இன்று சாதிச் சங்கங்களுக்கும் சாதிக்கட்சிகளுக்கும் புரவலர்கள்.

நத்தம் தாக்குதல் மற்றும் கௌரவக் கொலைகள் என்று அழைக்கப்படும் சாதிவெறிக் கொலைகள் எதைக் காட்டுகின்றன? நகரமயமாக்கம், பெண் கல்வி ஆகியவற்றின் காரணமாக ஒரே இடத்தில் படிக்கின்ற ஆண்களும் பெண்களும் சாதிய எல்லை கடந்து அறிமுகமாகிறார்கள். பழைய சாதிய இறுக்கங்களும் மனத்தடைகளும் தகர்ந்து காதலிக்கிறார்கள். அவர்களுடைய எதார்த்த வாழ்க்கைக்கும் விருப்பத்துக்கும் சாதி பொருத்த மற்றதாக, அவர்களது சுதந்திரத்துக்குத் தடையாக இருக்கிறது. சாதி நிராகரிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சார்ந்த இளைஞர்களைக் காதல் மணம் புரிந்துள்ள பிற சாதிகளைச் சேர்ந்த பெண்கள் நக்கீரன் இதழுக்கு அளித்துள்ள பேட்டிகளில், அவர்களிடம் சாதி மறுப்பு ஜனநாயகக் கருத்துகள் இயல்பாக அரும்பியிருப்பதை காண முடியும்.

ஒருபுறம் சாதியின் அடித்தளம் பலவீனப்பட்டு வந்த போதிலும், சாதி ஆதிக்க விழுமியங்கள் அழிந்து விடவில்லை. சாதி கடந்த திருமணங்களில், தொடக்கத்தில் பெற்றோர்கள் முரண்படுவது, பின்னர் மெல்ல ஏற்றுக் கொள்வது என்பது தான் பெரும்பாலும் நடந்து வருகிறது. திவ்யாவின் தந்தை நாகராஜ் விசயத்திலும் அதுதான் நடந்திருக்கும். அவ்வாறு நடக்க விடாமல் அங்கே சாதி வெறியைத் தூண்டி, இத்தகைய கொடூரமானதொரு தாக்குதலை நடத்தக் காரணமாக இருந்திருப்பது பாட்டாளி மக்கள் கட்சி எனும் சாதிக்கட்சி. விடுதலைச்சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் மீது குற்றம் சாட்டி, அக்குற்றச்சாட்டுகளுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் பொறுப்பாக்கி, இதன் அடிப்படையில் ஆதிக்கசாதி சங்கங்கள் அனைத்தையும் திரட்டி நிறுத்தியிருக்கிறார் ராமதாசு. சாதி கடந்த திருமணத்தை எதிர்ப்பது என்று தொடங்கி வன்கொடுமைச் சட்டத்தையே முடக்குவது, சாதி - தீண்டாமையைத் தங்கள் பிறப்புரிமையாக அறிவிப்பது என்ற எல்லைக்குச் செல்கின்றனர் சாதிவெறியர்கள்.

### சாதியைப் பாதுகாக்கும் அரசு, தீண்டாமையை ஒழிக்குமா?

சாதியை ஒழித்து சமத்துவத்தைக் கொண்டுவருவதற்கான வழிமுறைகளாகச் சிபாரிசு செய்யப்பட்ட இட ஒதுக்கீட்டால் பதவியும் அதிகாரமும்



171 கோடி ரூபாய் பெறுமான ரியல் எஸ்டேட் மோசடி வழக்கில் சிக்கிய வேலாயுதம் (நடுவில்) 2009-நாடாளுமன்றத் தேர்தலில் வி.சி. கட்சியின் விழுப்புரம் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின், கருணாநிதியிடம் ஆசி பெறும் திருக்காட்சி. (கோப்புப் படம்)

பெற்ற ஆதிக்க சாதியினரின் சங்கங்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஒன்றுதிரண்டு நிற்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் தீண்டாமைக் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்படுவதே இல்லை. பதிவு செய்யப்படும் வழக்குகளும் குற்றவாளிகளுக்கு விடுதலை பெற்றுத்தரும் விதத்திலேயே சோடிக்கப்படுவதால் 3 சதவீதம் பேர்கூட தண்டனை பெறுவதில்லை. இன்று வன்கொடுமைச் சட்டத்தை முடக்க இதுவே ஆதாரமாக காட்டப்படுகிறது.

கீழிருந்து மேல் வரை தலித் போலீசு அதிகாரிகள் இருந்த போதிலும், அவர்களே கயர்லாஞ்சி வழக்கை எப்படி முடக்கினர் என்று அம்பலப்படுத்துகிறார் ஆனந்த் தெல்டும்டெ. இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்பது தனிநபர்களின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்குமேயன்றி, சாதி எனும் சமூகக் கொடுமையை ஒழிக்க உதவாது என்பதுடன், அதுவே சாதிய பிழைப்புவாத, வாக்கு வங்கி அரசியலுக்கும் வழிதிறந்து விடுகிறது என்பதையே அனுபவங்கள் காட்டுகின்றன.

இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஊடாகப் பிறந்ததோ, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியின் மூலம் நிலைநாட்டப்பட்டதோ அல்ல. இது விடுதலைப் போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்வதற்கும், பிரித்தாளுவதற்கும், நிறுவனமயப்படுத்துவதற்கும் பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டு மேலிருந்து திணித்த, கறை படிந்த ஜனநாயக அரசு வடிவம்.

''போலீசும் உளவுத்துறையும் சரியாகத் தம் கடமையைச் செய்திருந்தால் நத்தம் தாக்குதலை தடுத்திருக்க முடியும்; வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கத் தமிழக அரசு தவறிவிட்டது'' என்ற வகையில் கூறப்படும் விமர்சனங்கள், தெரிந்தோ தெரியாமலோ இந்த அரசு குறித்த பிரமையை உருவாக்குகின்றன. ஆனால், சட்டங்கள் மூலம் சமுதாயத்தை மேலிருந்து ஜனநாயகப்படுத்தும் நோக்கத்தில் இந்த அரசு உருவாக்கப்படவில்லை. சாதி முதலான பிற்போக்கு விழுமியங்களை ஒழித்து இந்திய சமூகத்தை ஜனநாயகப்படுத்தக்கூடாது என்பதே அரசின் நோக்கம்.

## ஜனநாயகப் புரட்சியின்றி சாதி - தீண்டாமை ஒழிப்பு இல்லை!

சாதி, தீண்டாமை, ஆணாதிக்கம் உள்ளிட்ட ஜனநாயக விரோத விழுமியங்களை மக்கள் மனங்களிலிருந்து அகற்ற வேண்டுமானால், சாதி - மத வேறுபாடுகளை நிராகரிக்கின்ற ஜனநாயகப் புரட்சிக்கான போராட்டத்தில் மக்கள் ஈடுபடுத்தப்படவேண்டும். தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற உணர்வை தாழ்த்தப்பட்ட மக்களிடம் யாரும் உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை. சாதி ஆதிக்கம் கூடாது என்ற உணர்வுக்கு ஒரு சாதி இந்துவைக் கொண்டு வருவது எப்படி என்பதுதான் கேள்வி.

திவ்யா போன்ற பெண்கள் இத்த கைய உணர்வுக்கு வருவதற்கு காதல் ஒரு காரணமாக இருக்கிறது. ஆனால், ஆதிக்க சாதி மக்களை ஒட்டுமொத்தமாக இந்த உணர்வுக்கு கொண்டு வருவது எப்படி என்பதே நம்முன் இருக்கும் கேள்வி. நக்சல்பாரி அமைப்புகள் அப்பகுதியில் செல்வாக்கு பெற்றிருந்த காலத்தில் சாதி உணர்வு தலையெடுக்கவில்லை என்று கூறப்படுவதன் பொருள், ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த அனைவரும் தண்டனை குறித்த அச்சத்தினால் ஒடுங்கியிருந்தனர் என்பதல்ல; சாதி பாராட்டுவது கூடாது என்று கருதும் ஜனநாயகப் பண்பும் மனநிலையும் உழைக்கும் மக்களிடம் உருவாக்கப்பட்டிருந்தது என்பதுதான் அதன் பொருள்.

பார்ப்பனிய சாதியப் படிநிலை அமைப்பின் ஆகத்தாழ்ந்த படிகளில் இருக்கும் தாழ்த்தப்பட்ட சாதிகளாக இருந்தாலும் சரி, ஆதிக்க சாதியாக இருந்தாலும் சரி, சாதியின் பெயரால் நடத்தப்படும் அரசியல் ஒருக்காலும் சாதியை ஒழிக்காது. அது சாதி அமைப்புகளையும், சாதியப் பிழைப்புவாதக் கட்சிகளையும் மேலும் வலுப்படுத்தவே பயன்படும். ஒரு புதிய ஜனநாயகப் புரட்சிக்காக மக்களைத் திரட்டும் போக்கில்தான், சாதி தம் வர்க்க நலனுக்கு எதிரானது என்பதையும், அது ஒரு தீயொழுக்கம் என்பதையும் ஆதிக்க சாதி மக்களுக்கேகூட உணர்த்த முடியும்.

● தொரட்டி

### கோபாலகிருஷ்ணன், பிரியா படுகொலைகள்:

# வன்னிய சாதிவெறிக்குப் பலியான இளந்தளிர்கள்

தருமபுரி தாழ்த்தப்பட்ட மக்கள் மீது வன்கொடுமைத் தாக்குதலைத் தொடுத்த கையோடு, ராமதாசு தலைமையிலான ஆதிக்க சாதி வெறிக் கும்பல் கக்கிவரும் சாதி வெறித் தீ ஆங்காங்கே அப்பாவி தாழ்த்தப்பட்ட மக்களைக் காவு வாங்கி வருகிறது.

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு, சென்னிநத்தம் கிராமம் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கல்லூரி மாணவரான கோபாலகிருஷ்ணனும், பரதூர் கிராமம் வன்னிய சாதியைச் சேர்ந்த கல்லூரி மாணவி துர்காவும் ஒருவரையொருவர் காதலித்து வந்தனர். கடந்த 12.12.12 அன்று துர்கா அழைத்ததன் பேரில் அவரைச் சந்திக்க சேத்தியாதோப்பு சந்தைக்குச் சென்ற கோபாலகிருஷ்ணன், அதன் பின் வீடு திரும்பவே இல்லை.

சுமார் ஒரு வாரத்திற்குப் பின்னர், 19-12-12 அன்று பரதூரிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவிலுள்ள வெள்ளியக்குடி ஓடையில் கழுத்தறுக்கப்பட்டு, நாணல் கொண்டு சகதிக்குள் திணித்து வைக்கப்பட்ட நிலையில் கோபாலகிருஷ்ணனின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

"கோபாலகிருஷ்ணனின் கொலைக்குக் காரணமான, ராமதாஸ், காடுவெட்டி குரு மீது வன்கொடுமைத்தடுப்புச்சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். கொலைக் குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். அதுவரை கோபாலகிருஷ்ணனின் சடலத்தை வாங்க மாட்டோம்'' என்ற கோரிக்கைகளை முன்வைத்து சென்னிநத்தம் கிராம மக்களை அணிதிரட்டியது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. இப்போராட்டத்திற்கு மனித உரிமைப் பாதுகாப்பு மையம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் ஆதரவு தெரிவித்துப் பங்கெடுத்துக் கொண்டன.

காடுவெட்டி குரு - ராமதாஸ் உள்ளிட்டு, கோபாலகிருஷ்ணனின் கொலைக்குக் காரணமான குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி சேத்தியாத்தோப்பு - சிறீமுஷ்ணம் பகுதியில் நடந்த மறியல் போராட்டம். (உள்படம்) கோபாலகிருஷ்ணன்.



இதன்பின், கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்யப் போவதாகப் போக்குக் காட்டிய போலீசு, உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்யாமல், துர்காவின் 75 வயதான பாட்டி கனகவல்லியைக் கொலைவழக்கில் கைது செய்து ஏய்க்க நினைத்தது. போலீசின் தகிடுதத்தத்தைப் புரிந்துகொண்ட சென்னிநத்தம் கிராம மக்கள், ‘‘உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படும் வரை சடலத்தை அடக்கம் செய்ய மாட்டோம்’’ என மீண்டும் போராட்டத்தில் இறங்கினர்.

‘‘இப்படுகொலையை இரு குடும்பத்தின் பிரச்சினையாகச் சுருக்கி வழக்கை முடிக்க நினைக்கிறது, போலீசு. வன்னிய ஆதிக்க சாதிவெறி தூண்டிவிடப்பட்டதன் விளைவாக நிகழ்ந்துள்ள படுகொலைதான் கோபாலகிருஷ்ணன் மரணம்’’ என்பதை அம்மக்களிடையே வலியுறுத்திப் பேசினார், ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர், வழக்குரைஞர் ராஜு.

சென்னிநத்தம் கிராம மக்கள் நடத்திய தொடர் போராட்டங்களின் விளைவாக, கொலை செய்யப்பட்ட கோபாலகிருஷ்ணனின் தந்தையின் புகார் மனுவை வாக்குமூலமாகப் பதிவு செய்து கொண்டது போலீசு. இதனையடுத்து 21-12-12 அன்று சென்னிநத்தம் கிராமத்தில் கோபாலகிருஷ்ணனின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலர் சிந்தனைச்செல்வன், மனித உரிமைப் பாதுகாப்பு மையம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்பைச் சேர்ந்த தோழர்கள், பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த ஆர்ம்ஸ்ட்ராங், பெண்ணாடம் திருவள்ளுவன், மனித உரிமைக் கட்சி விஸ்வநாதன், தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் அமைப்பாளர் அரங்க. குணசேகரன் உள்ளிட்டோர் நீதி கேட்டு சென்னிநத்தம் கிராம மக்கள் நடத்திய போராட்டத்தில் இறுதிவரையிலும் உடனிருந்ததோடு, கோபாலகிருஷ்ணனின் இறுதி ஊர்வலத்திலும் பங்கேற்றனர்.

கோபாலகிருஷ்ணனின் படுகொலை மட்டுமல்ல; குறிஞ்சிப்பாடி அருகில் பாச்சாரபாளையத்தில் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் வன்னியப் பெண்ணைப் பார்த்து முடி ஒரிஜனலா, டூப்ளிகேட்டா எனக் கேலி செய்ததாகக் கூறி, 10-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டோரின் வீடுகளை கொளுத்தினர், வன்னிய சாதிவெறியர்கள். பண்ருட்டியில் மாணவி பிரியா என்ற தாழ்த்தப்பட்ட பெண், தனது தோழியின் காதல் திருமணத்திற்கு உதவினார் என்பதனால், அவ்விளம்பெண் ஆதிக்க சாதிவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டு குளத்தில் சடலமாக வீசியெறியப்பட்டார். உளுந்தூர்பேட்டை அருகேயுள்ள குன்னத்தூரைச் சேர்ந்த அருந்ததியர் சாதியைச் சேர்ந்த கண்ணன், வன்னியப் பெண் காயத்ரியைக் காதலித்த விவகாரத்தில், போலீசும் வன்னிய சாதிவெறியர்களும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு காதலர்களை மிரட்டிப் பிரித்தனர். ‘‘நீ தற்கொலை செய்து கொள்; இல்லையேல் உன் காலனியைக் கொளுத்திவிடுவோம்’’ என கண்ணன் மிரட்டப்பட்டதால், அவர் 29.12.2012 அன்று தற்கொலை செய்துகொண்டு இறந்து போனார்.

சாதி - தீண்டாமை வன்கொடுமைகளுக்கெதிராக போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய இத்தருணத்தில், அதற்கு எதிராகவும் சாதி ஆதிக்கத்தைப் புதுப்பிக்கும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறார், குச்சு கொளுத்தி ராமதாசு. அவரது தலைமையில் அணிதிரண்டுள்ள அனைத்து சமுதாயப் பாதுகாப்புப் பேரவை என்ற சாதிவெறி பிடித்த கிரிமினல் கும்பலை மோதி வீழ்த்தாவிட்டால், இருண்ட காலத்திற்குள் தமிழகம் தள்ளப்படும்.

**- மனித உரிமைப் பாதுகாப்பு மையம்,**
**விருத்தாசலம்.**

## ‘‘ஆதிக்க சாதிவெறியை முறியடிப்போம்!’’

### – வெண்மணி நினைவுநாளில் புரட்சிகர இயக்கங்களின் உறுதியேற்பு




**கூ**லி உயர்வு கேட்டதற்காக உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட 44 தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகளின் - வெண்மணித் தியாகிகளின் 46-ஆவது நினைவு தினத்தை, ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த டிசம்பர் 25 அன்று தமிழகமெங்கும் கடைப்பிடித்தன.

திருச்சி, கரூர், மதுரை, வேலூர், கோவை, கோத்தகிரி, நாமக்கல், சிவகங்கை உள்ளிட்டுத் தமிழகத்தின் பல பகுதிகளில் நடந்த இந்த நினைவு தினம், இன்றளவும் தாழ்த்தப்பட்டோர் மீது ஏவிவிடப்படும் வன்கொடுமைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. வன்கொடுமைக் குற்றங்களில் ஈடுபடும் ஆதிக்க சாதிவெறியர்களை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வலியுறுத்தியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழு இழப்பீடு வழங்கக்கோரியும், அனைத்து ஆதிக்க சாதிச் சங்கங்களையும் தடை செய்யக் கோரியும் இவ்வார்ப்பாட்டங்களில் கண்டன முழக்கங்களை எழுப்பப்பட்டன.

– பு.ஜ.செய்தியாளர்

# பொய்கள்-அவதூறுகளால் உண்மையை மறைத்துவிட முடியாது!

**கொ**டியங்குளம், திண்ணியம், உத்தப்புரம் தீண்டாமைச் சுவர், மேலவளவு முருகேசன் படுகொலை, விருத்தாசலம் கண்ணகி-முருகேசன் தம்பதி படுகொலை உள்ளிட்டுத் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட வன்கொடுமைத் தாக்குதல்களைக் கண்டித்து ம.க.இ.க. உள்ளிட்ட புரட்சிகர அமைப்புகளும், இடது, வலது கம்யூனிஸ்டுகளும் மற்றும் பிற ஜனநாயக அமைப்புகளும் போராடியதற்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன. ஆதிக்க சாதிச் சங்கங்களோடு கூட்டணி வைத்துக் கொள்ளத் தயங்காத திராவிடக் கட்சிகளும்கூடத் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்படும் வன்கொடுமைத் தாக்குதல்களைக் கண்டித்து வந்துள்ளன.

இப்படிபட்ட நிலையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மற்றும் சில ''தலித்'' அறிவுஜீவிகள் தருமபுரித் தாக்குதலைக் கண்டிக்கும் சாக்கில், தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்படும் வன்கொடுமைத் தாக்குதல்களை இடது, வலது கம்யூனிஸ்கள் உள்ளிட்ட ஓட்டுக்கட்சிகளும்; தேர்தல் அரசியலுக்கு வெளியே செயல்பட்டுவரும் புரட்சிகர-ஜனநாயக இயக்கங்களும் கண்டித்துப் போராடியதேயில்லை என்ற பச்சைப் பொய்யைத் திரும்பத்திரும்ப பேசியும் எழுதியும் வருகின்றனர். குறிப்பாக, தொல். திருமாவளவன், ''நத்தம் தாக்குதலுக்கு முன்பாக இந்த அமைப்புகள் வன்கொடுமைகளைக் கண்டுகொண்டதேயில்லை'' என்றவாறு ஒரு பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்.

வன்கொடுமைகளை எதிர்த்துப் போராடி வருவதில் இவ்வமைப்புகளின் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்கதாக இருக்கும் பொழுது, இவர்கள் எப்படி நாக்கில் நரம்பில்லாமல் பேசியும், எழுதியும் வருகிறார்கள் என்பதைக் கீழே தொகுத்துக் கொடுத்திருக்கிறோம்; தாழ்த்தப்பட்ட மக்களை வேறு யாரும், குறிப்பாக நக்சல்பாரி புரட்சிகர இயக்கங்கள் அணிதிரட்டி விடக் கூடாது; அம்மக்களைத் தமது ஓட்டுவங்கியாகப் பயன்படுத்தும் சுயநல நோக்கத்திற்காகவே புரட்சிகர-ஜனநாயக இயக்கங்கள் மீது அபாண்டமாகப் பழிபோட்டு வருகிறார்கள் என்பதையும் அம்பலப்படுத்தியிருக்கிறோம். யார் பக்கம் உண்மை இருக்கிறது என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் உணர வேண்டிய தருணமிது.

- ஆசிரியர் குழு.

● *''தலித்துகள் மீது ஈவிரக்கமற்ற வன்கொடுமைகள் ஏவிவிடப்பட்ட எத்தனையோ சந்தர்ப்பங்களில் இவர்கள் மனசாட்சி இல்லாத அளவுக்கு அமைதி காத்திருக்கிறார்கள். ஆனால், தருமபுரி பிரச்சினையில் கம்யூனிஸ்டுகள் உடனே களத்துக்கு வந்தனர். தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கூடத் துயர் துடைக்கும் நடவடிக்கைகளை எடுத்தன.''*

*(விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், ஆனந்த விகடன்-நவ.28 இதழுக்கு அளித்த நேர்காணலில், ''தருமபுரி பிரச்சினையில் தமிழ்த் தேசியவாதிகள், திராவிடக் கட்சிகள், கம்யூனிஸ்டுகள்... இவர்களின் நிலைப்பாடு உங்களுக்கு ஏற்புடையதாக இருக்கிறதா?'' என்ற கேள்விக்கு அளித்த பதில்.)*

● *''எதிர்வினையாற்ற வேண்டியவர்கள் தலித்துகள்தான். அதிலும் குறிப்பாக, அடங்க மறு! அத்து மீறு! திமிரி எழு! திருப்பி அடி! என்கிற முழக்கங்களை முன்வைத்த விடுதலைச் சிறுத்தைகள்தான் எதிர்வினையாற்ற வேண்டியவர்கள். ஆனால், சிறுத்தைகளோ அமைதி காக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை தலித் இயக்கங்கள் எழுப்புகின்றன.''*

*''பெரியாரிய, மார்க்சிய, தமிழ்த்தேசிய சக்திகளும் மனித உரிமை ஆர்வலர்களும், இன்ன பிற சனநாயகச் சக்திகளும் இத்தகைய இக்கட்டான நிலைமையில் ஆற்றவிருக்கும் எதிர்வினைகளுக்காக - செயற்பாடுகளுக்காக*

1997-இல் தென்மாவட்டங்களில் நடந்த தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான தாக்குதல்களைக் கண்டித்து, ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்புகளும் தமிழகம் தழுவிய அளவில் நடத்திய சாதி-தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தையொட்டி வெளியிடப்பட்ட நூலின் முகப்பு அட்டை (வலது) மற்றும் அவ்வியக்க நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் (இடது).




அன்னூர் பகுதியில் கடைபிடிக்கப்படும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக, பெரியார் திராவிடர் கழகம் அருந்ததியின மக்களை அணிதிரட்டி நடத்திய பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்கும் போராட்டம். (கோப்புப் படம்)

மாற்று அரசியலை முன் வைக்கக்கூடியவர்கள் என்று தங்களை விளித்துக் கொள்ளும் நவீனகால அரசியல் ஆளுமைகள்கூட தலித்துகளுக்குக் குரல் கொடுக்காத இருட்சூழல் நிலவுகிறது.

ஆக, சாதிய சமூகத்தின் வேர்களைக் கெல்லி எடுக்கத் தங்கள் கைகளைத் தருகின்ற ஆதரவு சக்திகள்தான் இன்றைக்கும் பெயரளவில் பொதுவாக இயங்குவதாகக் கூறுகின்றனர். அதற்கான உண்மையான முன்னெடுப்புகள் தலித்துகளால் மட்டுமே அல்லது சிறுபான்மையினரால் மட்டுமே எடுக்கப்படுகிறது என்பது வரலாற்று உண்மை.''

(யாழன் ஆதி, சமநிலைச் சமுதாயம் - டிசம்பர் 2012)

விடுதலைச் சிறுத்தைகள் காத்திருப்பதையே தற்போதைய கடமையாகக் கருதுகிறது.''

(வன்னி அரசு, செய்தித் தொடர்பாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி)

• ''அந்த தருமபுரியில் அதே நாய்க்கன்கொட்டாய் கிராமத்தில் 1984-ஆம் ஆண்டு தருமபுரி எதிரொலிகள் என்ற எனது முதல் கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. அப்பு, பாலன் சிலை திறப்பில் ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த தோழர்களை, அவர்கள் இசைத்த புரட்சிப் பாடல்களை எண்ணிப் பார்க்கிறேன். திரும்பிய திசையெல்லாம் செங்கொடிகள் அசைந்த ஊர்கள். இப்போது அதே கிராமங்களில் தலித்துகளின் வீடுகளை எரித்த நெருப்பு, செங்கொடிகளை விடவும் சிவப்பாக மேலெழுந்துள்ளன. இந்த நாட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன மிச்சம் இருக்கிறது? அவர்களது போராட்ட வடிவங்களும் அமைப்பின் அங்கங்களாக மாறி விடும்போது அவர்கள் தம்மைத்தாமே மாய்த்துக்கொண்டு அழிவது தவிர, வேறென்ன வழி இருக்கிறது?''

(ரவிக்குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)

• ''சாதி அமைப்பை எதிர்த்த போராட்டத்தில் தலித்துகளுக்கு சமூகக் கூட்டாளி என எவருமே இல்லை என்று அம்பேத்கர் சொன்னார். அது இப்போதும் பொருந்துகிற ஒன்றுதானா என்பதை மனசாட்சி உள்ளவர்களின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.''

(ரவிக்குமார், தருமபுரி எதிரொலிகள், நிறப்பிரிகை வலைப்பூ)

• ''தலித்துகள் தொடர்ந்து படுகொலைகளுக்கும் வாழ்வாதார கொள்ளைகளுக்கும் உட்படுத்தப்படும்போது, அவர்களுக்காகப் பொதுச் சமூகத்திலிருந்து உள்ளார்ந்த குரல் கொடுக்க யாரும் இல்லாத சூழல் நிலவுகிறது.

• ''ஈழம், மூவர் தூக்கு தண்டனை எதிர்ப்பு, கூடங்குளம் அணு உலை, முல்லைப் பெரியாறு, பரமக்குடி, தாமிரபரணிப் படுகொலை என எல்லாப் பிரச்சினைக்கும் வலியச் சென்று போராடும் திருமாவளவன், தலித் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும்போது மட்டும் அரசியல் அனாதை போல தனித்துவிடப்படுகிறார். அரசியலிலும் தீண்டாமை இருப்பதை அவர் உணர வேண்டிய தருணம் இது.''

(சுகிர்தராணி, காலச்சுவடு, டிசம்பர் 2012)

பின்குறிப்பு:

1. தருமபுரி வன்கொடுமை தாக்குதல் பற்றி நாடாளுமன்றத்தில் திருமாவளவன் பேசுவதைக்கூட அனுமதிக்காமல் கூச்சல் போட்டு, கலாட்டா செய்தது, அ.தி.மு.க. கும்பல். அதனால், நாடாளுமன்ற அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்தார், சபாநாயகர். ஆனாலும், திருமாவளவன் தருமபுரி தாக்குதலுக்கு அ.தி.மு.க.வும் துயர் துடைக்கும் நடவடிக்கைகள் எடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். எப்பேர்பட்ட பெருந்தன்மை! எப்பேர்பட்ட பெருந்தகை!

2. ஒண்ணுமே செய்யாமல் இருப்பதை, இனி யாரும் கையாலாகத்தனம், துரோகம் எனக் கூறக் கூடாது. அதற்கு கடமை, பொறுப்புணர்ச்சி, முதிர்ச்சி என்றவாறு மறுபெயர் இடலாம். இது குறித்து விளக்கம் வேண்டுவோர், வன்னி அரசை அணுகவும்.

# வாலைச் சுருட்டிக்கொண்ட வன்னியரசு!

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வன்னியரசு கடந்த மாதம் ''பா.ம.க.- வின் சாதி வெறியும் புரட்சிகரக் குழுக்களின் பிழைப்புவாதமும்'' என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அவதூறுகளால் நிரம்பிய அக்கட்டுரையை ''பெரியார் தளம்'' என்கிற பெரியார் தி.க. இணையதளமும். ''கீற்று'' என்கிற தளமும் பெருமகிழ்ச்சியோடு வெளியிட்டுள்ளன.

வன்னியரசு தனது கட்டுரையில், '''புரட்சி' செய்யப் புறப்பட்ட நக்சல்பாரிகள், அந்தப் பாதையிலிருந்து விலகி, சாதி அரசியல் கட்சிகளிலும், கட்டப்பஞ்சாயத்து நடத்தியும் பிழைக்கப் போய்விட்டார்கள். புரட்சிகரக் குழுக்களுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக தலித் மக்கள் இந்தத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர். நாய்க்கன்கொட்டாய் முகப்பில் இன்று அப்பு, பாலன் சிலைகள் மட்டுமே பாதுகாப்பாக இருக்கிறது. சிலை வைத்த மக்களோ வீடின்றி வாசலின்றித் தவிக்கின்றனர். பா.ம.க. வன்னியர்கள் மட்டுமல்ல, தி.மு.க., அ.தி.மு.க., ம.க.இ.க., என்று கட்சி பேதம் இன்றி அனைத்து வன்னியர்களும் முதலில் சாதி, அப்புறம்தான் கட்சி என்று ஒன்று சேர்ந்து கொண்டு தாக்கினர்'' என்று எழுதியிருந்தார்.

''அறிவு நாணயம் இருந்தால், தாக்குதலில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டும் ம.க.இ.க. காரர்கள் யார் யார் என்பதைச் சொல்லட்டும். அல்லது அவரது கட்டுரையைப் பிரசுரித்திருக்கும் கீற்று, பெரியார் தளம் வலைத்தளங்களுக்கு கொஞ்சமாவது நேர்மை இருக்குமானால், வன்னி அரசுவை விளக்கமளிக்குமாறு கோரட்டும்'' என்று வினவு தளத்தில் நம் தோழர்கள் எழுதியிருந்தனர்.

அதற்கு கீற்று தளத்தில் பதில் எழுதிய வன்னியரசு. ''இத்தாக்குதலுக்கு பின்னிருந்து அனைத்து வேலைகளையும் செய்தவர் தோழர் கிருஷ்ணன். இவர் அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த வன்னியர், ம.க.இ.க. தோழர்'' என்று குறிப்பிட்டிருந்தார். ''அந்த கிருஷ்ணன் யார் என்பதை நேரில் வந்து காட்டுங்கள் நானும் வருகிறேன்'' என்று கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த வி.வி.மு. தோழர் ஆம்பள்ளி முனிராஜ் வினவு தளத்தின் மூலம் சவால்விட்டதும் வன்னியரசு வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் செய்தித்தொடர்பாளர் வன்னியரசு.



தருமபுரி தாக்குதலைப் பற்றி முதலாளித்துவப் பத்திரிகைகளிலிருந்து தாக்குதலுக்குள்ளான தாழ்த்தப்பட்ட மக்கள் வரை அனைவரும் ஒன்றைக் கூறுகிறார்கள்: ''நக்சல்பாரி இயக்கம் இருந்தவரை சாதி ஒடுக்குமுறை இல்லை. இயக்கம் பின்னடைவுக்குள்ளானதால்தான் சாதி வெறியர்கள் தலை தூக்கியிருக்கிறார்கள்'' என்கின்றனர்.

நக்சல்பாரி அரசியலால் ஈர்க்கப்பட்ட ஆதிக்கசாதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஒன்றிணைந்த காரணத்தினால்தான் அங்கே சாதி வெறியர்களை நேருக்கு நேர் எதிர் கொள்ள முடிந்தது.

தருமபுரியில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் சாதி வெறியர்களை எதிர்த்து அந்தந்த சாதிகளைச் சேர்ந்தவர்களையும், பிற ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த ஜனநாயக சக்திகளையும் முன்நிறுத்தி தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை நிலை நாட்டியதும் சாதி ஆதிக்கத்தை அசைத்துப் பார்த்ததும் கம்யூனிஸ்ட் இயக்கமே அன்றி, தலித் அமைப்புகள் அல்ல. இதை தாழ்த்தப்பட்ட மக்களும் நன்கு அறிவார்கள். இந்த உண்மைதான் ம.க.இ.க.வுக்கு எதிராக வன்னியரசைப் புளுக வைத்திருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் வாழப்பொறுக்காத வன்னிய சாதிவெறியர்களின் வண்மம் தான் இந்தத் தாக்குதலுக்கு காரணம் என்று அனைவரும் கூறுகின்றனர். தாக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களோ நக்சல்பாரி தோழர்கள் இருந்திருந்தால், இப்படியெல்லாம் நடந்திருக்காது என்கிறார்கள். ஆனால், வன்னியரசு மட்டும் இதற்கு வேறு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்.

சேரி மக்கள் நக்சல்பாரிகளை ஆதரித்ததற்கான தண்டனையைத்தான் இப்போது அனுபவித்து வருகிறார்களாம். இப்படி வன்னியரசு ஏன் புளுக வேண்டும்? அதற்கு பல காரணங்கள் உண்டு எனினும், 'நக்சல்பாரி கட்சிக்குப் போகாதீர்கள்' என்பது முதல் காரணம். இரண்டாவது தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்துபவர்களை ம.க.இ.க. தொடர்ச்சியாக விமர்சித்து வருகிறது. அவர்களின் நடைமுறையை மட்டுமின்றி, இந்த அரசமைப்புக் குள்ளேயே சீர்திருத்தம் மூலம் சாதியை ஒழித்துவிட முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்குகின்ற அம்பேத்கரியத்தையும் அரசியல் ரீதியில் விமர்சிக்கிறது. எனவேதான் வன்னியர் சங்கத்தை விட, ம.க.இ.க. மீது வன்னி

அரசு கொலைவெறியோடு பாய்கிறார்.

தருமபுரி தாக்குதலைக் கண்டித்து, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் படைப்பாளிகள் நடத்திய கூட்டத்தில், இவர்களுடைய முகத்துக்கு நேரே பூணூலை உருவிக் காட்டும் காங்கிரசு பார்ப்பானுக்கு கைதட்டுகிறார்கள். குச்சு கொளுத்தி ராமதாசுடன் நல்லிணக்கம் காண விரும்புகிறார்கள்.

> **ராமதாசுக்கு அம்பேத்கர் சுடர் பட்டமளித்தது யார் ? மதுரை விமான நிலையத்திற்கு தேவர்சாதிவெறியனின் பெயரை வைக்கச் சொன்னது யார் ? சேதுராமனுடன் கைகோர்த்துக்கொண்டு போஸ் கொடுத்தது யார் ? மூப் பனார் வீட்டுக்குப் போனது யார்? நாலு சீட்டுக்காக பாசிச பாப்பாத்தியிடம் நின்றது யார் ? கண்ணகி - முருகேசன் கொலையில் கட்டப்பஞ்சாயத்து செய்தது யார்?**

ராமதாசுக்கு அம்பேத்கர் சுடர் பட்டமளித்தது யார் ? மதுரை விமான நிலையத்திற்கு தேவர்சாதிவெறியனின் பெயரை வைக்கச் சொன்னது யார் ? சேதுராமனுடன் கைகோர்த்துக்கொண்டு போஸ் கொடுத்தது யார் ? மூப்பனார் வீட்டுக்குப் போனது யார்? நாலு சீட்டுக்காக பாசிச பாப்பாத்தியிடம் நின்றது யார் ? கண்ணகி-முருகேசன் கொலையில் கட்டப்பஞ்சாயத்து செய்தது யார்?

ரியல் எஸ்டேட் மாஃபியா மடிப்பாக்கம் வேலாயுதத்தை வேட்பாளராக்கிச் சந்தி சிரித்தவர்கள், ஊரறிந்த கட்டப் பஞ்சாயத்து பேர்வழியும், கிரிமினல் வழக்குகளில் தொடர்புடையவருமான சொல்வப்பெருந்தகையை இணைப் பொதுச்செயலாளராக்கி அழகு பார்த்தவர்கள், கட்டப்பஞ்சாயத்தையே அன்றாட கட்சிப்பணியாக்கி, அதற்காக கூச்சநாச்சமின்றி சாதிவெறியர்களோடு ஒட்டிக்கொண்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகம் செய்கின்ற பிழைப்புவாதிகள்தான் புரட்சிகர அமைப்புகள் மீது அவதூறு செய்கிறார்கள்.

தனது முதல் கட்டுரையில் புரட்சியாளர்களை அவதூறு செய்யும் வன்னியரசு, இரண்டாவது கட்டுரையில் மாவோயிஸ்டுகளின் செயல்பாடுகளைப் பார்த்துப் புல்லரித்துப் போய் ''அவங்க ரொம்ப நல்லவங்க; தியாகம் எல்லாம் பண்றாங்கன்னு சர்டிபிகேட் கொடுக்கிறார்!'' அய்யாவுக்கு கொடுத்த அம்பேத்கர் சுடர் விருதை மாவோயிஸ்டுகளுக்குக் கொடுக்காமல் இருந்தால் சரி. வன்னி அரசு போன்றவர்களால் அவதூறு செய்யப்படுவதே அதைவிடக் கவுரவமானது.

● தொரட்டி

# கிரானைட்: மெகா கூட்டணி-மகா கொள்ளை

## – கிரானைட் கொள்ளையை எதிர்த்துப் போராட அறைகூவும் ஆவணப்படம்.

ஓட்டுக்கட்சிகளின், அதிகாரவர்க்கத்தின், போலீசு-நீதித் துறையின் ஆதரவோடு நடந்த கிரானைட் கொள்ளையை அம்பலப்படுத்திப் பிரச்சார இயக்கத்தை நடத்திவரும் ம.க.இக., வி.வி.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகளின் மதுரைக்கிளை ''கிரானைட்: மெகா கூட்டணி - மகா கொள்ளை'' என்றொரு ஆவணப் படத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது.

கடந்த 15.12.2012 அன்று மாலை மதுரை ஓட்டல் பேர்ல்-இல் உசிலம்பட்டி வட்டார வி.வி.மு. செயலர் தோழர் குருசாமி தலைமையில் ஆவணப் படத்தின் வெளியீட்டு விழா நடைபெற்றது. பி.ஆர்.பி. கொள்ளைக் கும்பலுக்கு எதிராகப் பல்வேறு வழக்குகளில் விவசாயிகளின் சார்பில் வழக்காடிவரும் மதுரை உயர் நீதிமன்ற வழக்குரைஞர் லஜபதிராய் ஆவணப்படத்தை வெளியிட, பி.ஆர்.பி. கொள்ளைக் கூட்டத்துக்கு எதிராகப் பல்வேறு வழக்குகளைத் தொடுத்து தொடர்ந்து போராடி வரும் கீழவளவைச் சேர்ந்த திரு. வி.ஆர். தங்கராஜ் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.




ஆவணப்படத்தை வெளியிட்டுப் பேசிய வழக்குரைஞர் லஜபதிராய், ''தனியார்மயம் - தாராளமயத்தின் பகற்கொள்ளைக்கு ஒரு சான்றாக பி.ஆர்.பி. போன்ற மாஃபியா கும்பல்கள் வளர்ந்துள்ளதையும், சட்டமும் நீதியும் இந்தக் கொள்ளையர்களுக்கு முன்னே மண்டியிட்டுக் கிடப்பதையும் அம்பலப்படுத்தி, மக்கள் போராட்டங்கள் மூலம்தான் இக் கொள்ளையர்களைத் தண்டிக்க முடியும்'' என்றார்.

''தனியார்மயம் - தாராளமயத்தை ஒழிக்காமல், இதுபோன்ற பகற்கொள்ளையை ஒழிக்க முடியாது'' என்பதை உணர்த்தி, அதற்காகப் போராட அறைகூவினார், ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன்.

நிகழ்ச்சியின் இடையே ஆவணப் படத்திலிருந்து சில காட்சிகள் ஒளிபரப்பப்பட்டன. கிரானைட் கொள்ளையர்களுக்கு எதிராக நாம் எந்தத் திசையில் போராட வேண்டும் என்ற திசைவழியை காட்டுவதாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும் அமைந்திருந்தது இந்நிகழ்வு.

-பு.ஜ.செய்தியாளர்.

## குண்டர் சட்டத் திருத்தம்:

# திறந்தவெளி சிறைச்சாலையாகும் தமிழகம்

அண்மையில் நடந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் போலீசு அதிகாரிகள் மாநாட்டின் நிறைவில் முதல்வர் ஜெயலலிதா செய்துள்ள அதிரடி அறிவிப்புகள், பாசிச ஆட்சியைச் சட்டபூர்வமாகக் கட்டவிழ்த்துவிடுவதற்கான முன்னறிவிப்பாகவே அமைந்துள்ளன. இம்மாநாட்டில், போலீசாருக்கு ஏராளமான சலுகைகளை அறிவித்துள்ள ஜெயலலிதா, தற்போதுள்ள குண்டர் சட்டத்தின் எல்லைகளை விரிவுபடுத்துவது, இணையக் குற்றங்களை (சைஃபர் கிரைம்) குண்டர் சட்டத்தின் கீழ் கொண்டுவருவது, மறியல் செய்வதற்கு முப்பது நாட்களுக்கு முன்னதாக அனுமதி வாங்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதிப்பது - என மூன்று சட்டத் திருத்தங்களை அறிவித்துள்ளார்.

தொடர் குற்றங்களில் ஈடுபடும் தொழில்முறைத் திருடர்கள், ரவுடிகள், போதைப் பொருட்களைக் கடத்துபவர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் போன்றோரைத் தண்டிப்பது; வெளியில் இருந்தால் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடுவார்கள் என்பதால், அத்தகையோரைக் குற்றமிழைப்பதிலிருந்து தடுத்து வைப்பது என்று கூறிக் கொண்டுதான் பிணை ஏதுமின்றி ஓராண்டு காலத்துக்குச் சிறையிலடைக்கும் வகையில் குண்டர் சட்டம் கொண்டுவரப்பட்டது. தொடர்ச்சியாகக் குற்றங்களில் ஈடுபடுவோரைக் குற்றச் செயல்களிலிருந்து தடுப்பதற்கான இச்சட்டத்தை இப்போது, ஒருவர் முதன்முறையாகக் குற்றம் செய்தால்கூட ஏவலாம் என்றும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்போரை இச்சட்டத்தின் கீழ் கைது செய்து தண்டிக்கலாம் என்றும் இச்சட்டத்தைத் திருத்தி விரிவாக்கியுள்ளது பாசிச ஜெயா கும்பல்.



ஏற்கெனவே தேசியப் பாதுகாப்புச் சட்டம் எனும் ஆள்தூக்கிச் சட்டத்தின்படி, அரசுக்கு எதிராகப் போராடும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் எதிர்க்கட்சியினரும் நாடெங்கும் ஒடுக்கப்பட்டனர். அக்கொடிய சட்டத்தைக் கொண்டு 1990-களில் பாசிச ஜெயா அரசு ம.க.இ.க. முதலான புரட்சிகர அமைப்புகளையும் ஈழ விடுதலை ஆதரவு அமைப்புகளையும் கொடூரமாக ஒடுக்கியது. அடிப்படை மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்காகவே கொண்டுவரப்பட்ட ஜனநாயக விரோதச் சட்டம்தான் இது. இச்சட்டத்தின் நீட்டிப்பாகவே, தொடர் குற்றங்களைத் தடுப்பது என்ற பெயரில் குண்டர் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. தன்னளவிலேயே ஜனநாயக விரோதமான இச்சட்டம், பின்னர் திருட்டு விசிடி தயாரிப்போர், விற்போர் மீதும் ஏவும் வகையில் விரிவாக்கப்பட்டது.

தமிழகத்தில் குண்டர் சட்டத்தைப் போலக் கேடாகப் பயன்படுத்தப்பட்ட சட்டம் வேறு எதுவும் இல்லை. குண்டர் சட்ட வரையறைக்குள் வராதவை என்று 99 சதவீதத்துக்கும் மேலான வழக்குகள் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்படுவது தொடர்கிறது. வீரபாண்டி ஆறுமுகம் போன்ற தி.மு.க. தலைவர்களும் முன்னணியாளர்களும் இச்சட்டத்தால் பழிவாங்கப்பட்ட கதையை அனைவரும் அறிவர். எதிர்க்கட்சியினரை முடக்குவதற்கானதாக மட்டுமின்றி, பெயரளவிலான ஜனநாயக உரிமைகளையும் பறித்து மக்களை ஒடுக்கும் நோக்கத்துடன் அச்சட்டத்தின் எல்லைகள் இப்போது மேலும் விரிவுபடுத்தப்படுகின்றன.

பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தால் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிடலாம் என்கிற புதிய விதியானது, ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் கொடிய விதியாகும். மின்வெட்டுக்கு எதிராகத் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடும் உழைக்கும் மக்களும், கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராகப் போராடும் மக்களும், காவிரி-முல்லைப் பெரியாறில் தமிழகத்தின் நியாயவுரிமைக்காகப் போராடும் விவசாயிகளும், இனி பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்படலாம். பொது அமைதி என்றால் என்ன என்பதை மாவட்ட ஆட்சியரும், போலீசு அதிகாரிகளும், அரசு வழக்குரைஞர்களும் அரசாங்கத்தின் நோக்கங்களுக்கு ஏற்பத் தீர்மானிப்பார்கள். இதன் மூலம் எந்தவிதமான சட்டபூர்வமான போராட்டங்களைக்கூட நடத்த முடியாத நிலைமை ஏற்படும். உழைக்கும் மக்கள் ஒரு கண்டன ஊர்வலம் நடத்தும்போது, அத

னால் பொதுப் போக்குவரத்துக்கு சிறிது நேரம் இடையூறு ஏற்பட்டால் கூட, அதனைப் பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டி, முன்னணியாளர்களைக் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிட முடியும்.

ஏற்கெனவே உள்ள தகவல்-தொடர்பு தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ், இணையக் குற்றத் தடுப்புக்கான 66-ஏ பிரிவின்படி, நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்துக்கு சொத்துக்கள் குவிந்தது எப்படி என்று ''டுவிட்டரில்'' விமர்சித்ததற்காக புதுச்சேரியில் ஒருவர் கைது செய்யப்பட்டார். மும்பையில், பால்தாக்கரேயின் மரண ஊர்வலத்துக்காக மும்பை நகரம் முடக்கப்பட்டதைப் பற்றிக் கருத்து தெரிவித்ததற்காக இரு பெண்கள் கைது செய்யப்பட்டனர். கருத்துரிமையைப் பறிக்கும் இக்கொடிய சட்டப் பிரிவானது, இப்போது குண்டர் சட்டத்திலும் சேர்க்கப்பட்டு, இணையக் குற்றங்களில் ஈடுபட்டதாக ஒருவரைக் கைது செய்து சிறையிலடைக்கும் வகையில் குண்டர் சட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இணையக் குற்றங்களைக் குண்டர் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான நோக்கம், அரசுக்கு எதிராகக் கருத்துக்களைச் சொல்பவர்களை மிரட்டி ஒடுக்குவதற்குத்தான். அதாவது, இனி ஜெயலலிதாவை நையாண்டி செய்து யாராவது கேலிச்சித்திரம் வரைந்தால்கூட அவர் மீதும் குண்டர் சட்டம் பாயும். இணையத்தின் மூலம் சுதந்திரமாகக் கருத்துகளை வெளியிட முடியும் என்று கருதிக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்க அறிவுத்துறையினரது மாயைகளை பாசிச ஜெயாவின் இச்சட்டத்திருத்தம் கீழறுத்துப் போட்டுள்ளது.

இத்தனையும் போதாதென்று, மறியலில் ஈடுபடுபவர்கள் 30 நாட்களுக்கு முன்னதாக போலீசிடம் தெரிவித்து அனுமதி பெற வேண்டும் என்ற விதியானது, பெயரளவிலான ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் கொடூரத் தாக்குதலாகும். தங்கள் குரலை ஆட்சியாளர்கள் செவிமடுக்காதபோது, உழைக்கும் மக்கள் வேறுவழியின்றி பயன்படுத்தும் ஒரு ஆயுதம்தான் மறியல் போராட்டம். இது அநீதிக்கு எதிரான மக்களின் போராட்ட வடிவம். ஒரு ஊரில் சாதியக் கொடுமையோ, அல்லது போலீசின் அட்டூழியமோ நடந்தால், அப்போது நாட்டு மக்களின் கவனத்தை உடனடியாக ஈர்க்க மறியல் போராட்டம் முக்கியமான போராட்ட முறையாக உள்ளது. இது வன்முறைப் போராட்டம் அல்ல. இருப்பினும், இத்தகைய போராட்டம் நடத்தும் உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது. மின்வெட்டுக்கு எதிராக நள்ளிரவில்கூட குடும்பத்துடன் திரண்டு, வேறுவழியில்லாத நிலையில்தான் உழைக்கும் மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே போலீசிடம் அனுமதி பெற வேண்டும் என்பது கேலிக்கூத்தானது மட்டுமின்றி, மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையையே குழிபறிக்கும் செயலாகும். மறியல் போராட்டத்தை முற்றிலும் தடை செய்யவில்லை என்று காட்டிக் கொண்டு, மறியல் போராட்டத்தைத் தண்டிக்கத்தக்க குற்றமாக மாற்றியுள்ளது பாசிச ஜெயா கும்பல்.

## இம்மென்றால் பொய்வழக்கு! ஏனென்றால் குண்டர் சட்டம்!

பொது அமைதிக்குக் குந்தகம் ஏற்படுத்துபவர்களையும் குண்டர் சட்டத்தில் கைது செய்யலாம் என ஜெயா அறிவித்திருப்பது மக்களுக்காகப் போராடுபவர்களைக் குறிவைத்துதான் என்பதை, சென்னை-மதுரவாயல் பகுதி புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியைச் சேர்ந்த திவாகரன், குமரேசன் என்ற இரண்டு தோழர்கள் குண்டர் சட்டத்தின்கீழ் கைதாகியிருப்பது நிரூபித்துவிட்டது.

கடந்த ஆகஸ்டு 25-ஆம் தேதி மதுரவாயல் ஏரிக்கரைப் பகுதியில் ஒரு கொலை வழக்கு தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக வந்த போலீசு, பகுதி மக்களைப் பீதியூட்டும் அராஜகத்தில் இறங்கியது. அவ்விரண்டு தோழர்களும் போலீசின் அராஜகத்தைத் தட்டிக் கேட்டதற்காக அவர்களைக் கைது செய்து, பொய் வழக்கு போட்டு, சிறையிலடைத்த போலீசு, அதன் பின் அவர்கள் மீது குண்டர் சட்டத்தையும் ஏவிவிட்டது. போலீசின் இந்தக் காட்டு தர்பாரைக் கண்டித்து போலீசு நிலையத்தை முற்றுகையிட்ட அப்பகுதி மக்களின் மீதும், பு.மா.இ.மு தோழர்கள் மீதும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்திய போலீசு, பு.மா.இ.மு. தோழர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்டு 64 பேர் மீது பொய்வழக்கு போட்டுச் சிறையில் அடைத்தது.

குண்டர் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப் போவதாக கடந்த டிசம்பர் 19 அன்றுதான் அறிவித்தார், ஜெயா. ஆனால், அதற்கும் முன்பாகவே உழைக்கும் மக்களுக்காகப் போராடிவரும் பு.மா.இ.மு. தோழர்கள் மீது அச்சட்டத்தைச் சட்டவிரோதமான முறையில் ஏவியிருக்கிறது, சென்னை போலீசு. அம்மா எள் என்பதற்கு முன்பாகவே எண்ணெயாக நின்ற தமிழக போலீசின் கடமையுணர்ச்சியை என்னவென்பது!

தனியார்மய - தாராளமயத் தாக்குதல் தீவிரமாவதைத் தொடர்ந்து நாடெங்கும் மக்களின் போராட்டங்கள் தன்னெழுச்சியாகப் பெருகி வருகின்றன. அதை முந்திக் கொண்டு பாசிச அடக்குமுறைச் சட்டங்களும் பெருகி வருகின்றன. தனியார்மய - தாராளமயத்துக்கு எதிராகப் போராடுபவர்களை எவ்விதத் தடையுமின்றி ஒடுக்குவதற்காகவே தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையமும், தடா-பொடா சட்டங்களின் மறு அவதாரமான ''ஊபா''வும் உருவாக்கப்பட்டுள்ளன. நாட்டு மக்களின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் வகையில் ஆதார் அடையாள அட்டை கொண்டுவரப்படுகிறது. பெருகிவரும் எதிர்ப்புகளை நசுக்குவதற்கான முன்னேற்பாடாகவே, இப்போது குண்டர் சட்டத்தின் எல்லைகளும் விரிவாக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே சமச்சீர் கல்வி, பேருந்துக் கட்டண உயர்வு, மின்வெட்டு, காவிரியில் பிரச்சினை முதலான வற்றால் மக்களின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள பாசிச ஜெயா கும்பலின் ஆட்சியை போலீசு அடக்குமுறையும் பாசிச சட்டங்களும்தான் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆட்சிக்கு வந்தவுடன், ''அம்மா திருந்திவிட்டார், இவர் பழைய ஜெயலலிதா அல்ல'' என்று பார்ப்பன கோயபல்சு பத்திரிகைகள் அவருக்கு ஒளிவட்டம் போட்டன. ஆனால் பாசிச ஜெயாவோ, தான் ஒரு பார்ப்பன பாசிஸ்டுதான் என்பதைத் தனது அதிரடி பாசிச சட்டங்களின் மூலம் மீண்டும் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

● குமார்

## நேரடிப் பணப்பட்டுவாடா திட்டம்:

# பட்டினிச் சாவுக்கான நுழைவுச்சீட்டு!

**“உங்கள் கையில் உங்கள் பணம்” என்ற கவர்ச்சிகரமான சொல்லடுக்கின் பின்னே, ரேஷன் கடைகளை ஒழித்துக் கட்டும் தீயநோக்கம் மறைந்துள்ளது.**

முதியோர் உதவித் தொகை, கல்வி உதவித் தொகை போன்ற சில அரசு உதவித் திட்டங்கள் பண வடிவிலும், அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், எரிவாயு உருளை, டீசல், உரம் போன்றவைகளுக்கான மானியம் பொருள் வடிவிலும் வழங்கப்படும் தற்போதைய நடைமுறையை மாற்றி, அனைத்து மானியங்களையும், நல உதவித் திட்டங்களையும் பண வடிவில் மட்டுமே மக்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளது, மைய அரசு. நேரடிப் பணப்பட்டுவாடா திட்டம் (Direct Cash Transfer) எனப் பெயரிடப்பட்டுள்ள இத்திட்டம், ‘‘உங்கள் பணம் உங்கள் கையில்’’ எனக் கவர்ச்சிகரமான முறையில் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதனை முதற்கட்டமாக குறிப்பிட்ட 51 மாவட்டங்களில் எதிர் வரும் ஜனவரி 1, 2013 முதல் அறிமுகப்படுத்தவும், 2013 -ஆம் ஆண்டின் இறுதிக்குள் நாடெங்கிலும் கொண்டு வரவும் மைய அரசு திட்டமிட்டுள்ளது.

நல்ல பாம்பு படமெடுத்து ஆடுவதைப் பார்ப்பது அழகாகவும் கவர்ச்சியாகவும் தெரிந்தாலும், அதனைக் கையிலெடுத்துக் கொஞ்ச முடியாது. அதனைப் போன்றதுதான் இந்தத் திட்டமும். ‘‘உங்கள் பணம் உங்கள் கையில்’’ என்ற இந்தக் கவர்ச்சிகரமான சொல்லடுக்கின் பின்னே, பொது விநியோகத் திட்டத்தை, அதாவது ரேஷன் கடைகளை ஒழித்துக் கட்டும் அபாயம் மறைந்திருக்கிறது.

தனியார்மயம்-தாராளமயத்தை அறிமுகப்படுத்திய காலந்தொட்டே ரேஷன் கடைகளின் மூலம் மக்களுக்குக் கிடைத்துவரும் அரைகுறையான உணவுப் பாதுகாப்பை ஒழித்துக் கட்டுவதை ஆட்சியாளர்கள் ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்து வருகின்றனர். இக்கொள்கையின்படி ரேஷன் அட்டைகள், வெள்ளை அட்டை, பச்சை அட்டை எனப் பிரிக்கப்பட்டு, அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டம் பெரும்பாலான மாநிலங்களில் ஒழித்துக்கட்டப்பட்டது. குறைந்த விலையில் உணவுப் பொருட்களைப் பெற்றுவரும் வறிய மக்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்ற வஞ்சகமான சட்டத்தைக் கொண்டு வந்தது, மன்மோகன்-சோனியா கும்பல். இதற்காகவே, நகர்ப்புறங்களில் நாளொன்றுக்கு 29/- ரூபாய்க்கு மேலும், கிராமப்புறங்களில் 23/- ரூபாய்க்கு மேலும் கூலி பெறுவோர் அனைவரும் வறுமைக் கோட்டுக்கு மேலே வாழ்வதாக வரையறுத்தது, திட்ட கமிசன். இந்நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகத்தான் நேரடிப் பணப்பட்டுவாடாத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

‘‘ரேஷன் கடையில் சந்தை விலையில் ஊற்றப்படும் மண்ணெண்ணெயை வாங்க முடிவதில்லை’’ என காலி டின்களை கவிழ்த்துக் காட்டிக் கூறுகிறார், இராசஸ்தான் மாநிலம்-ஆல்வார் மாவட்டம், கோட்காசிம் பகுதியைச் சேர்ந்த பத்ரம்.



எனினும், நேரடி பணப்பட்டுவாடாத் திட்டத்தின் கீழ் தற்போதைக்கு 29 நலத் திட்டங்களை மட்டுமே கொண்டுவரப் போவதாகவும் அரிசி, கோதுமை உள்ளிட்ட ரேஷன் பொருட்களுக்கு வழங்கப்படும் மானியத்தை இத்திட்டத்தின் கீழ் உடனடியாகக் கொண்டு வரப் போவதில்லை என்றும் மைய அரசு அறிவித்திருக்கிறது. இது, மக்கள் மத்தியில் இந்தத் திட்டம் எப்படிபட்ட எதிர்வினையைத் தோற்றுவிக்கிறது என ஆழம் பார்க்கும் தந்திரம் தவிர வேறல்ல.

இந்தத் திட்டம் முழுமையாக அமலாகும்பொழுது, ரேஷன் கடைகள் பெயரளவில் இருக்கும். ஆனால், அக்கடைகளின் ஊடாக அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை மானிய விலையில் பொதுமக்களுக்கு விநியோகிப்பது ரத்து

**சத்தான உணவு கிடைக்காத கர்ப்பிணிப் பெண்களும், நோஞ்சான் குழந்தைகளும் நிறைந்திருக்கும் நமது நாட்டில், ஏறத்தாழ 70 சதவீத மக்கள் வெறும் 20 ரூபாயை மட்டுமே தினக் கூலியாகப் பெறுகிறார்கள் என்ற நிலையில், மக்களுக்குக் கிடைத்து வந்த அரை குறை உணவுப் பாதுகாப்பையும் பறிப்பது பட்டினிச் சாவுகள் என்ற பேரழிவைத்தான் ஏற்படுத்தும்.**



செய்யப்பட்டு, அவை தனியார் மளிகைக் கடைகள் போல இயங்கும். இத்திட்டத்தின்படி ரேஷன் அட்டைதாரர்கள் தற்பொழுது மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களைச் சந்தை விலையில் ரேஷன் கடைகளில் வாங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் என்னென்ன பொருட்களை வாங்கியிருக்கிறார்கள் என்பது பதிவு செய்யப்பட்டு அரசிற்கு அனுப்பப்படும். அதன் பின், அவர்கள் வாங்கிய அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், பாமாயில் போன்ற பொருட்களுக்கான மானியம், அவர்களது வங்கிக் கணக்கில் போடப்படும்.

உதாரணத்திற்குச் சொன்னால், ஒருவர் ஒரு கிலோ அரிசியை முப்பது ரூபாய் என்ற சந்தை விலைக்கு வாங்குவதாகவும், அந்த அரிசியின் மானிய விலை மூன்று ரூபாய் எனவும் வைத்துக் கொண்டால், பொது மக்கள் மானிய விலையைவிடக் கூடுதலாகச் செலுத்திய தொகையை (ரூ.27/-), அரசு அவர்களுக்குத் திருப்பித் தரும். இந்த மானியத்தைப் பெறுவதற்குப் பொது மக்கள் ஒவ்வொருவரும் ஆதார் அடையாள அட்டையையும், வங்கிக் கணக்கையும் பெற்றிருக்க வேண்டும். எனினும், இந்தப் பணப்பட்டுவாடா பொதுமக்கள் ரேஷன் கடையில் பொருட்களை வாங்கிய இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே நடந்துவிடாது. குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கொரு முறைதான் மானியம் பொதுமக்களின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்படும்.

தற்பொழுது ரேஷன் கடைகளில் மானிய விலையில் வழங்கப்படும் உணவுப் பொருட்களையும், 10 லிட்டர் மண்ணெண்ணெயையும் ஒரே தவணையில் வாங்குவதற்கே பணத்தைப் புரட்ட முடியாமல் கூலித் தொழிலாளர்களும் கிராமப்புற மக்களும் தட்டுத் தடுமாறுவதோடு, பல நேரங்களில் பொருட்களை வாங்காமலும் விட்டுவிடுகிறார்கள். இப்படிபட்ட நிலையில் வறியவர்களையும் ஏழைகளையும் சந்தை விலை கொடுத்து உணவுப் பொருட்களை வாங்க வேண்டுமென்ற கட்டாயத்திற்குள் தள்ளுவது, ரேஷன் பொருட்களைப் பெறுவதிலிருந்தே அவர்களை ஒதுக்கி வைத்துவிடும். இத்திட்டம் பரிசோதனை முறையில் நடத்தப்பட்ட டெல்லியிலும், ராஜஸ்தானிலும் கிடைத்த அனுபவங்கள் ஏழைகள் ஒதுக்கப்பட்டதை நிரூபித்திருக்கின்றன.

• • •

இராசஸ்தான் மாநிலம் - ஆல்வார் மாவட்டத்தில் அமைந்துள்ள கோட்காசிம் என்ற பகுதியில் ரேஷன் கடைகளின் மூலம் மண்ணெண்ணெய் வழங்குவது பரிசோதனையின் அடிப்படையில் நேரடிப் பணப்பட்டுவாடா திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது. இதன்படி, மானிய விலையில் ஒரு லிட்டர் ரூ.15/-க்கு விற்கப்பட வேண்டிய மண்ணெண்ணெய் ரேஷன் அட்டைதாரர்களுக்கு சந்தை விலையில் (ஒரு லிட்டர் ரூ.50/-க்கு) விற்கப்பட்டது. இத்திட்டம் அமலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள்ளாகவே ரேஷன் கடைகளில் மண்ணெண்ணெய் விற்பனை அதளபாளத்துக்குச் சரிந்தது. அப்பகுதியிலுள்ள அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சந்தை விலையைக் கொடுத்து மண்ணெண்ணெய் வாங்கிக் கொள்வது கட்டுப்படியாகாமல், அவர்கள் மண்ணெண்ணெய் வாங்குவதையே நிறுத்திவிட்டதால்தான் இச்சரிவு ஏற்பட்டது.

அப்பகுதியைச் சேர்ந்த தினக்கூலியான பச்சன் சிங், ''கடந்த ஆண்டு ஜனவரி தொடங்கி ஏப்ரல் முடிய 1,000 ரூபாய்க்கு மண்ணெண்ணெய் வாங்கியிருக்கிறேன். ஆனால், ராஜஸ்தான் கிராமிய வங்கியில் உள்ள எனது கணக்கில் இதுவரை ஒரு பைசாகூட மானியமாக வரவாகவில்லை. இனியும் அதிக விலை கொடுத்து மண்ணெண்ணெய் வாங்க வழியில்லாததால் விறகு வாங்கத் தொடங்கிவிட்டேன்'' என்கிறார்.

கோட்காசிம் பகுதியிலுள்ள புர் கிராமத்தைச் சேர்ந்த பத்ரம் என்பவர், ''ரேஷன் கார்டு எனது தந்தையின் பெயரிலுள்ளது. வங்கிக் கணக்கோ எனது பெயரில் உள்ளது. அரசு அதிகாரிகள் இதைக் காட்டி எனக்கு மானியம் வழங்க மறுப்பதால், நான் மண்ணெண்ணெய் வாங்குவதை நிறுத்திவிட்டேன்'' என்கிறார்.

இப்படிபட்ட காரணங்களால்தான் அப்பகுதியில் மண்ணெண்ணெய் விற்பனை சரிந்து போனது என்பதை முதலாளித்துவப் பத்திரிகைகள்கூட அம்பலப்படுத்திய பிறகும், அரசோ, ''போலி ரேஷன் கார்டுகளும் மண்ணெண்ணெய் கடத்தலும் ஒழிந்ததால்தான் இச்சரிவு ஏற்பட்டிருப்பதாகவும், இதன் மூலம் மண்ணெண்ணெய்க்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தில் 79 சதவீதம் வீணாவது தவிர்க்கப்பட்டிருப்பதாகவும், இதுதான்

இத்திட்டத்தின் வெற்றியென்றும்'' தம்பட்டம் அடித்து வருகிறது.

''ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கும்போது ஏற்படும் நிர்வாகப் பிரச்சினைகளால்தான் கோட்காசிம் பகுதியைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு மானியம் முறையாகக் கிடைக்காமல் போயிருக்கிறது. வங்கிகளின் முகவர்கள் கிராமப்புற மக்களின் வீட்டு வாசலுக்கே வந்து மானியத்தை வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. எனவே, சில்லறை பிரச்சினைகளைக் காட்டி இப்பணப்பட்டுவாடா திட்டத்தை எதிர்க்கக் கூடாது'' என வாதிடுகிறார், கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.

• • •

குடும்ப அட்டைதாரர்களின் வாசல் கதவைத் தட்டி மானியப் பணத்தைக் கொடுத்தாலும்கூட, இந்தத் திட்டம் அடித்தட்டு மக்களின் நலனுக்கு எதிரானதுதான். ஏனென்றால், இந்தத் திட்டத்தின் மையமான நோக்கமே உணவு, உரம், எரிபொருள் ஆகியவற்றை சந்தை விலையில் வாங்கிக் கொள்ளும் கட்டாயத்திற்கும், மனோநிலைக்கும் மக்களைத் தள்ளிவிட வேண்டும் என்பதுதான். அரசு உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வதையும், அவற்றை மானிய விலையில் ரேஷன் கடைகளின் மூலம் விற்பதையும் சந்தையில் தலையீடு செய்யும் நடவடிக்கை; எனவே, இதனை ஏழை நாடுகள் கைவிட வேண்டும் என்பதை உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம் உள்ளிட்ட ஏகாதிபத்திய நிதியாதிக்க நிறுவனங்கள் கொள்கையாகவும் நிபந்தனையாகவும் அறிவித்துள்ளன. உணவுப் பொருள் மானியத்தையும், அரசு கொள்முதலையும் ஒரே அடியில் ஒழித்துக் காட்டினால், அது அரசியல்ரீதியாகத் தற்கொலைக்குச் சமமானதாக இருக்கும் என்பதாலேயே, இவற்றைக் கொல்லைப்புற வழியில் ஒழித்துக்கட்டும் நோக்கில் நேரடி பணப்பட்டுவாடா திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது, மன்மோகன் சிங் கும்பல்.

பணமாக அல்லாமல், உணவு, உரம், எரிபொருள் ஆகியவற்றை மானிய விலையில் பொருளாக வழங்கும் போது மட்டுமே சந்தையில் குறுக்கீடு செய்வதற்கு வாய்ப்புண்டு. ரேஷன் கடைகளில் விநியோகிக்கப்படும் உணவுப் பொருளின் விலைக்கும், அவற்றின் சந்தை விலைக்கும் வேறுபாடு கிடையாது என்ற நிலையை உருவாக்கும்பொழுது, அரசு சந்தையில் தலையீடு செய்வது முடிவுக்கு வந்துவிடும்.

பதுக்கல், வர்த்தகச் சூதாட்டம் போன்ற பல கிரிமினல் நடவடிக்கைகளால் உணவுப் பொருட்கள் கிடைப்பதில் செயற்கையாக தட்டுப்பாட்டை உருவாக்கியும்; உணவுப் பொருட்களின் விலைகளைச் சந்தையில் செயற்கையாக ஊதிப் பெருக்கியும் கொள்ளை இலாபம் சம்பாதித்து வந்த பதுக்கல் வியாபாரிகளையும் வர்த்தகச் சூதாடிகளையும் கட்டுப்படுத்தும் நோக்கில்தான் நாடெங்கும் நியாயவிலைக் கடைகள் தொடங்கப்பட்டன. அக்கடைகள் இந்த நோக்கத்தை முழுமையாக நிறைவு செய்யும் வண்ணம் அரசால் இயக்கப்படாவிட்டாலும், அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அரசு கொள்முதல் செய்து, ரேஷன் கடைகளின் மூலம் விநியோகம் செய்யும் நடைமுறை இருந்து வருவதால்தான், ஏழை மக்களுக்கு அரைகுறை உணவுப் பாதுகாப்பாவது கிடைத்து வருகிறது. நேரடிப் பணப்பட்டுவாடாத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்நிலையைத் திருப்பிப் போட முயலுகிறது, மன்மோகன் சிங் கும்பல்.

இன்னொருபுறமோ, உணவுப் பொருள்களின் விலைகள் சந்தையில் உயருவதற்கு ஏற்றவாறு மானியத்தை உயர்த்திக் கொடுக்கவும் அரசு முன் வராது. ஒவ்வொரு பட்ஜெட்டிலும் பற்றாக்குறையைக் குறைக்க மக்களுக்கு வழங்கப்படும் மானியத்தை வெட்டி வரும் அரசு, சந்தை விலைக்கு ஏற்ப மானியத்தை உயர்த்திக் கொடுக்கும் என நம்புவதற்கு எந்த அடிப்படையும் கிடையாது. இப்படிபட்ட நிலையில் குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் சந்தையின் சூதாட்டத்தில் சிக்கித் தவிக்க வேண்டியது தவிர, வேறு வழி இருக்காது. குறிப்பாக, வறிய நிலையில் வாழும் நகர்ப்புற உதிரித் தொழிலாளர்கள், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த ஏழை விவசாயிகள், பழங்குடி மக்கள் ஆகியோர் ஒன்று, சந்தை விலையில் உணவுப் பொருட்களை வாங்க வேண்டும், அல்லது பட்டினி கிடக்க பழகிக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.



‘‘மக்களுக்கு ஒதுக்கப்படும் ஒவ்வொரு ஒரு ரூபாய் மானியத்திலும் வெறும் 15 பைசாதான் அவர்களைச் சென்று சேர்கிறது. மீதியை இடைத்தரகர்கள்தின்று தீர்த்து விடுகிறார்கள்’’ என்று ராஜீவ் காந்தி சொல்லிவிட்டுப் போனதைச் சுட்டிக்காட்டி, இந்த இடைத்தரகர்களை ஒழித்து, மக்களுக்கு ஒதுக்கப்படும் மானியம் முழுமையாக அவர்களைச் சென்று சேர்வதற்காகத்தான் நேரடிப் பணப் பட்டுவாடாத் திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாகப் பீற்றி வருகிறது, காங்கிரசு கும்பல். உணவு மானியமாக, உர மானியமாக ஒதுக்கப்படும் இந்தப் பணத்தைக் கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்குக் கொண்டு சேர்க்க தனியார் வங்கித் தரகர்கள் (Bank Correspondents) நியமிக்கப்பட்டு வருகின்றனர். சில்லறை வர்த்தகத்தில் உள்ள இடைத்தரகர்களை ஒழிக்க பன்னாட்டு நிறுவனங்கள்; மானியத்தில் புகுந்து விளையாடும் இடைத்தரகர்களை ஒழிக்க வங்கித் தரகர்கள்!

> **கிராமப்புறங்களைச் சேர்ந்த கந்து வட்டி பேர்வழிகள், உர வியாபாரிகள் போன்ற பழைய நிலப்பிரபுத்துவக் கும்பல்கள்தான் வங்கித் தரகர்களாக அவதாரமெடுத்துள்ளனர். இவர்களின் கைகளில் ஏறத்தாழ 1,50,000 கோடி ரூபாய் மானியப் பணத்தைப் பட்டுவாடா செய்யும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார், மன்மோகன் சிங். ரேஷன் கடைகளில் நடக்கும் உணவுக் கடத்தல் - ஊழலைவிட, மானியத்தைப் பட்டுவாடா செய்யும் பொறுப்பைத் தனியாரிடம் ஒப்படைத்திருக்கும் இத்தாராளமய நடவடிக்கைதான் மிகப் பெரிய ஊழலாகும்.**

கிராமப்புறங்களைச் சேர்ந்த கந்துவட்டி பேர்வழிகள், உர வியாபாரிகள் போன்ற பழைய நிலப்பிரபுத்துவக் கும்பல்கள்தான் வங்கித் தரகர்களாக அவதாரமெடுத்துள்ளனர். இக்கும்பல் கிராமப்புற ஏழை மக்களை ஏற்கெனவே பல்வேறு வழிகளில் சுரண்டியும் ஏய்த்துப் பிழைத்தும் வரும் நிலையில், மானியத் தொகையை முழுங்கி விடாமல், அதில் கமிசன் அடிக்காமல் பட்டுவாடா செய்வார்களா என்பதே சந்தேகத்திற்குரியதுதான். எனினும், இவர்களின் கைகளில் ஒரு ரூபாயல்ல, இரண்டு ரூபாயல்ல, ஏறத்தாழ 1,50,000 கோடி ரூபாய் மானியப் பணத்தைப் பட்டுவாடா செய்யும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார், மன்மோகன் சிங். ரேஷன் கடைகளில் நடக்கும் உணவுக் கடத்தல் - ஊழலைவிட, மானியத்தைப் பட்டுவாடா செய்யும் பொறுப்பைத் தனியாரிடம் ஒப்படைத்திருக்கும் இத்தாராளமய நடவடிக்கைதான் மிகப் பெரிய ஊழலாகும்.

வங்கிக் கணக்கும் ஆதார் அட்டையும் இருந்தால் ஊழலும் மோசடியும் நடைபெறாது என மன்மோகன் சிங் கும்பல் நம்மை நம்பச் சொல்கிறது. ஆனால், இது வெற்றுப் பிதற்றல் என்பதை நூறு நாள் வேலைத் திட்டத்தில் நடைபெற்றுள்ள ஊழல்கள் அம்பலப்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக, இந்த ஆதார் அட்டை உண்மையான பயனாளிகளை நல உதவித் திட்டங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்குத்தான் பயன்பட்டுள்ளது என்பதை வறிய மாநிலமான ஜார்கண்டில் நடத்தப்பட்ட ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த ஆதார் அட்டைத் திட்டம் இதுநாள் வரை நாடாளுமன்றத்தின் ஒப்புதலையும் பெறவில்லை; நிதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவும் இந்த அட்டை வழங்குவதைச் சட்டபூர்வமானதாக ஏற்றுக் கொள்ளவில்லை. மானியத்தை ஒழிப்பதைவிட, ஆதார் அட்டைகள் மூலம் ஏழைகளை ஒழித்துக் கட்டுவது எளிது என்பதனால்தான், குடும்ப அட்டைதாரர்கள் ஆதார் அட்டையைப் பெற்றிருந்தால் மட்டுமே மானிய உதவியைப் பெற முடியும் என்ற நிபந்தனையை விதித்திருக்கிறார், மன்மோகன் சிங்.

நேரம் காலம் பாரமல் உழைத்து எவ்வளவுதான் சம்பாதித்தாலும், கிடைக்கும் கூலியைக் கொண்டுப் போதிய அளவில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்குவதே பெரும்பாடாக இருக்கும் நிலையில், வெளிச் சந்தையில் உணவுப் பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்து கொண்டே போகும் நிலையில், ரேஷன் கடைகளில்கூட குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வாங்க முடியாது என்ற நிலைமை மக்களின் மீது வலிந்து திணிக்கப்படுகிறது. அரைகுறைப் பட்டினியோடு போராடும் மக்களும், சத்தான உணவு கிடைக்காத கர்ப்பிணிப் பெண்களும், நோஞ்சான் குழந்தைகளும் நிறைந்திருக்கும் நமது நாட்டில், அவர்களுக்கு உரிய உணவுப் பாதுகாப்பை வழங்காமல், ஏதோ கொஞ்சம் பணத்தை வீசியெறிந்து, அவர்களை சந்தைச் சூதாட்டத்தில் சிக்க வைப்பது எத்துணை பயங்கரமானது? குடிப்பழக்கம் பெருகிவரும் வேளையில், குடும்பத்தலைவரின் பெயரில் வங்கியில் போடப்படும் மானியத் தொகை, உணவு வாங்கப் பயன்படுமா, டாஸ்மாக் கடைக்குப் போகுமா? ஏறத்தாழ 70 சதவீத மக்கள் வெறும் 20 ரூபாயை மட்டுமே தினக் கூலியாகப் பெறுகிறார்கள் என்ற நிலையில், மக்களுக்குக் கிடைத்து வந்த அரைகுறை உணவுப் பாதுகாப்பையும் பறிப்பது பட்டினிச் சாவுகள் என்ற பேரழிவைத்தான் ஏற்படுத்தும். இந்த அபாயத்தை உணர்ந்து, ‘‘உங்கள் கையில் உங்கள் பணம்’’ என்ற இந்த நயவஞ்சகத் திட்டத்தைப் பரிசோதனை அடிப்படையில்கூட நடத்தவிடாமல், உழைக்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து போராட வேண்டிய தருணமிது.

● செல்வம்

## பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள்:

# சட்டத்திருத்தம் தீர்வாகுமா?

**பெண்களைப் போகப்பொருளாகக் கருதும் சமூக–அரசியல் கட்டமைப்புதான் பெண்களின் முதல் எதிரியாகும்.**

இந்தியத் தலைநகர் தில்லியில் பாலியல் வல்லுறவுக் குற்றம், அதுவும் குறிப்பாகக் கும்பல் பாலியல் வல்லுறவுக் குற்றம் எப்போதாவது அரிதாக நடக்கும் நிகழ்வு அல்ல. ''இந்தியாவின் வல்லுறவுத் தலைநகர்'' என்ற வெறுக்கத்தக்க பெயர் பெறும் அளவுக்கு வாடிக் கையாகி விட்டது. ஒரு நாளைக்கு சராசரி இரண்டாவது நடப்பதுதான் என்கிறவாறு அதிகரித்துவிட்டது. காஷ்மீர், கிழக்கு- வட கிழக்கு மாநிலங்கள் போன்ற போராட்டக் களங்களிலும் கிராமப்புற எளிய ஒடுக்கப்படும் மக்கள் மீதும் வல்லுறவுக் குற்றங்கள் ஏராளமாக நடந்தபோதும் ''பெருந்தன்மையுடன் அமைதி காத்து வந்த தலைநகர்வாழ் குடிமக்களை'' கடந்த மாதம் 16-ஆம் நாள் முன்னிரவு நேரம் தில்லியில் நடத்தப்பட்ட கொடூரமான கும்பல் பாலியல் வல்லுறவுத் தாக்குதல் பொங்கி எழச் செய்துவிட்டது.

குறிப்பாக, தில்லி பல்கலைக்கழகங்களின் கல்லூரி களின் மாணவி-மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், இளந்தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்கள் வெறுப்பு, ஆத்திரம், கோபம் கொப்பளிக்கத் தில்லி அதி காரபீடங்களின் வாயில்களில் தினமும் குவிந்தார்கள். தடுப்புக்கம்பிகளையும், தடுப்பு அரண்கட்டைகளையும் அடித்து நொறுக்கிக் கொண்டு முன்னேறினார்கள். வல் லுறவுக் குற்றவாளிகளைத் தூக்கிலிடவும், பெண் களுக்குப் பாதுகாப்பும் அதற்குரிய கடும் சட்டங்கள் போடவும் கோரி முழக்கங்கள் எழுதிய அட்டைகளையும், மெழுகுவர்த்திகள் ஏந்தி பிரார்த்தனைகளும் ஆவேச முழக்கங்களும் எழுப்பி அமைதியாகப் போராடினார் கள். அதிகாரத்தில் இருப்பவர்கள் நேரடியாகத் தம்முன் வந்து தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக் குறுதி அளிக்க வேண்டுமென்பதுதான் அவர்களது உடனடி வேண்டுகோள்.

ஆனால், பெண்களுக்கு எதிரான எல்லாப் பாலியல் குற்றங்களும் இந்த அளவுக்கு வளர்வதற்குக் காரணமாக இருந்த அரசியல்-அதிகாரக் குற்றவாளிகள், தில்லி கும் பல் பாலியல் வல்லுறவு தாக்குதலைக் கண்டித்துக் குரல் கொடுப்பவர்களின் வரிசையில் முன்னணியில் வந்து நின்று கொண்டார்கள். பெண்களுக்கு எதிரான வன் முறைகளைத் தடுப்பதற்கான சட்டத்தைக் கடுமையாக் குவது முதல் வல்லுறவுக் குற்றவாளிகளுக்கு மரண தண் டனை, வல்லுறவு உணர்வுகளை காயடிக்கும் மருந்து ஊசி போடுவது வரை வல்லுறவுக் குற்றங்கள் மீது கட்சி வேறுபாடின்றிக் கடும் உக்கிரம் காட்டினர். இந்த வகை யில் செய்தி ஊடகங்களும் முன்னிலையில் நின்றன. ஆனால், தில்லித் தெருக்களில் போராட்டங்கள் வலுப் பெற, வலுப்பெற இக்கட்சிகளின், ஊடகங்களின் அணுகுமுறை நிறம் மாறத் தொடங்கியது. ஆளும் கட் சிகளும் அதிகார அமைப்புகளும் அடக்கு முறைகளைக் கையிலெடுத்தன. ''இளை ஞர்கள் - மாணவர்களின் போராட்டங்கள் எல்லை மீறிப் போய்க் கொண்டிருக் கின்றன. சமூக விரோத கும்பல்கள் ஊடு ருவி விட்டார்கள்'' என்று கூறி போலீசு அதிரடிப் படைத் தாக்குதல்கள் கட்ட விழ்த்து விடப்பட்டன. போலீசுக் காட்டு மிராண்டித்தனம் என்று தொடக்கத்தில் கண்டித்த ஊடகங்கள், போராட்டக்காரர் களின் கோரிக்கைகள் மிகையானவை, நிறைவேற்றகூடியவை அல்ல எனக் காட்ட ஆரம்பித்தன.

கல்லுளிமங்கர்களான சோனியா-மன் மோகன் கும்பல், கடும் நடவடிக்கை எடுக் கப்படும், சட்டங்கள் கடுமையாக்கப் படும், பேருந்துகளில் காமிராக்கள் பொ ருத்தப்படும், போலீசு ரோந்து அதிகரிக்கப்

பாலியல் வல்லுறவுக் கொடூரத்தை எதிர்த்துப் போராடும் நடுத்தர வர்க்கத்தினர் மீது வெறியோடு பாயும் இந்தியாவின் வல்லுறவுத் தலைநகரான டெல்லி போலீசு.



படும் என்று ஒருபுறம் வாக்குறுதி அளித்தது. மறுபுறம், ருசிய அதிபர் வருகைக்கு முன்பு தில்லி தெருக்களைச் சுத்தம் செய்துவிட வேண்டும் என்றும், வல்லுறவு தாக்குதலுக்குப் பலியாகி உயிருக்குப் போராடிவரும் பெண்ணுக்கு எதாவது நிகழ்ந்தால், அதுவும் இந்தியாவில் நிகழ்ந்தால் விபரீதமாகிவிடும் என்றும் சதித்தனமாகத் திட்டமிட்டது. போராட்டங்களை ஒடுக்கவும், அப்பெண்ணுக்கு உயர் சிகிச்சை என்ற பெயரில் சிங்கப்பூர் அனுப்பவும் உத்திரவு போட்டது. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு விட்டனர். விரைவில் குற்றப்பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்படும், விரைவு நீதிமன்றத்தில் விசாரித்துக் கூடிய விரைவில் தண்டிக்கப்படுவர்; போராட்டங்களை முடித்துக் கொண்டு இருப்பிடங்களுக்குத் திரும்புங்கள் என்று அதிகார பீடங்கள் எச்சரித்தன. வல்லுறவுத் தாக்குதலுக்குப் பலியான அப்பெண் சிங்கப்பூரில் இரண்டே நாளில் மரணமடைய, அரசு அவள் உடலை இரவோடு இரவாக கொண்டு வந்து சில நிமிடங்களில் எரியூட்டி விட்டது. இனிச் சட்டம் தனது வழக்கமான வேலையைச் செய்யும்! மக்கள் எல்லாவற்றையும் மறந்துபோவார்கள்!



தனது மகளைத் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கியதைத் தட்டிக்கேட்ட குற்றத்துக்காக அமிர்தசரஸ் கடைவீதியில் ஆளும் அகாலித்தளக் கட்சித்தலைவர்களுள் ஒருவனான ரஞ்ஜித்பால் சிங்-ஆல் பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட பஞ்சாப் போலீசு உதவி ஆய்வாளர் ரவீந்தர்பால் சிங். இந்த அநீதியை யாரும் தட்டிக்கேட்கவில்லையே என்று கதறியழும் அவரது மகள்.

இதற்கிடையே, பாலியல் வன்முறைக் குற்றங்களுக்குப் பெண்களே காரணமென்றும், குற்றவாளிகளை நியாயப்படுத்தியும், குடியரசுத் தலைவரின் மகன் உட்பட பல கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களே பேச ஆரம்பித்தனர். நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பாலியல் குற்றவாளிகள் கணிசமான பேர் உறுப்பினர்களாக உள்ளபோது, மாநிலப் போலீசுத் தலைமை அதிகாரிகள் முதல் போலீசில் பலரும் பாலியல் குற்றவாளிகளாக உள்ளபோது, இதில் ஒன்றும் வியப்பில்லை. தில்லியே வல்லுறவுத் தலைநகர் என்று பெயர் பெற்றுள்ளது என்றால், நாட்டின் பிற பகுதிகள் வேறு எப்படி இருக்கும்?! காசுமீரிலும், வடகிழக்கு, கிழக்கு-மத்திய இந்தியாவில் பிரிவினைவாதிகளையும் தீவிரவாதிகளையும் ஒடுக்குவது என்ற பெயரில் அரசின் ஆயுதப்படைகளே கும்பல் பாலியல் வன்முறை குற்றங்களைக் கேள்விமுறையின்றி நடத்தி வருகின்றன. தில்லி சம்பவம் நடந்த நாளுக்கு முன்னும் பின்னும் ஒரிசா, தில்லி, தமிழ்நாடு, மும்பை என்று பெருந்திக்குகளிலும் பாலியல் வல்லுறவுக் குற்றச்செய்திகள் குவிகின்றன. ஒன்றரை வயது, பதின்வயது குழந்தைகள், சிறுமிகள், பள்ளி மாணவிகள் பெருமளவு வல்லுறவுக்குப் பலியாகும் அவலம் ஆட்கொல்லி நோயைப் போல பரவுகின்றன.

பெண்களுக்கு எதிரான துன்புறுத்துதல்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கும்படி உச்ச நீதிமன்றம் உத்திரவு போட்ட அடுத்த நாள், பஞ்சாபின் ஒரு நகரில் பட்டப் பகலில் 5 வாலிபர்கள் கடைத்தெருவில் தந்தையுடன் போன இளம்பெண்ணை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கினர். தடுக்கப்போன அவளது தந்தை ஆளும் அகாலித் தள உள்ளூர்த் தலைவனால் சுட்டுக் கொல்லப்படுகிறார். கொல்லப்பட்டவன் போலீசு துணை இன்ஸ்பெக்டர். இதைவேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது ஒரு போலீசு பட்டாளம். இதே போன்று பாலியல் துன்புறுத்தலுக்கு இலக்கான வேறொரு இளம் பெண் அகாலி தளத் தொண்டர்களால் அடுத்த வாரம் தாக்கப்பட்டார். மும்பையில் தன் அண்டை வீட்டு இளம் பெண்ணுடன் பேசிக் கொண்டு போனான் ஒரு இளைஞன். அப்பெண்ணைக் கேலி கிண்டல் செய்த கும்பலை எதிர்த்ததற்காக அந்த கும்பலால் குத்திக் கொலை செய்யப்பட்டான் அந்த இளைஞன்.

இவ்வாறான பாலியல் வெறிச் சம்பவங்கள் இந்நாட்டில் அதிகரித்து வருவது ஏன்? ஏற்கனவே, பிற்போக்கு ஆணாதிக்க சமுதாயத்தைக் கொண்ட இந்திய சமூகத்தின் மீது புதிய சீர்திருத்தம் என்ற பெயரில் புதிய தாராளவாத அரசியல், பொருளாதாரம், பண்பாட்டு விழுமியங்கள் திணிக்கப்பட்டதன் விளைவாக பெண்களும் நுகர்வுவெறிக்கான பண்டமாகக் ஆணாதிக்க பாலியல் வெறியர்களால் கருதப்படுகின்றனர். புதிய சீர்திருத்தவாதமும் தாராளமயமும் பெண்களுக்குப் பாதுகாப்பையும் ஜனநாயகத்தையும் கொண்டு வந்துவிடவில்லை. ஆனால், அவ்வாறான மாயத்தோற்றத்துக்கு பலரும் பலியாகின்றனர். வெறுமனே சட்டத்தைக் கடுமையாக்கி பாலுக்குப் பூனையைக் காவல் வைப்பதுபோல போலீசிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் குறைக்குமா? பாலியல் குற்ற விசாரணை என்ற பெயரில் பெண்களை இழிவுபடுத்தும் நீதியரசர்களிடமிருந்து நீதி கிடைக்குமா?

● மாணிக்கவாசகம்

# நெற்களஞ்சியம் பிணக்காடாகிறது!

**மைய அரசின் அதிகாரத்தை நிலைகுலையச் செய்யும் போராட்டங்களைக் கட்டியமைப்பதன் மூலம் மட்டுமே, காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட முடியும்.**

**கா**விரியில் நீரின்றி தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் நெற்பயிர்கள் கருகிவிட்டன. நிலங்கள் நீரின்றி வெடித்துக் கிடக்கின்றன. கடன் பட்டு சாகுபடி செய்த விவசாயிகள் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர். டெல்டா பிராந்தியமானது, இன்னுமொரு விதர்பா பிராந்தியமாக மாறிக் கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டில் ஜூன் 12 அன்று திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை மூன்று மாதங்கள் கழித்து செப்டம்பர் 17 அன்றுதான் திறக்கப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்தனர். அடுத்த போகமான சம்பாவுக்கும் தண்ணீர் இல்லை. இதனால் நடப்பாண்டில் ஏறத்தாழ 5 லட்சம் குறுவைச் சாகுபடியும், ஏறத்தாழ 15 லட்சம் சம்பா சாகுபடியும் அழிந்துள்ளன. கடன் வாங்கிப் பயிரிட்ட விவசாயிகள் ஓட்டாண்டிகளாக்கப்பட்டுள்ளனர். சாகுபடி செய்திருந்த பயிர்கள் தண்ணீரில்லாமல் காய்ந்து, கடனாக வாங்கிப் போட்டுள்ள பணம் தம் கண்ணெதிரே கருகிப் போவதைக் கண்டு மனம் வெதும்பி, கடந்த நவம்பர் - டிசம்பர் மாதங்களில் ஒன்பது விவசாயிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளனர்.

இரு மாநில முதல்வர் 26 முறை பேச்சுவார்த்தை நடத்தி பயனில்லாததால்தான் 1990-இல் காவிரி நீர்த் தகராறு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. இருப்பினும், மீண்டும் இரு மாநில முதல்வர்களும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளுமாறு கடந்த நவம்பர் இறுதியில் கூறி காவிரி வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது பொறுப்பைத் தட்டிக் கழித்து நழுவி கொண்டது.

பயிர் கருகிப் போனதால் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகள் (கடிகாரச் சுற்றுப்படி) ஆண்டாங்கரை அப்துல் ரஹீம், கூரத்தாங்குடி ராஜாங்கம், திருத்துறைப்பூண்டி கோபால கிருஷ்ணன், கரகத்திக்கோட்டை ரங்கசாமி.









"காவிரி நீரைப் பயன்படுத்தி சாகுபடி செய்ய கர்நாடகத்துக்கு நடுவர் மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பரப்பளவு 8.47லட்சம் ஏக்கர் மட்டும்தான்; ஆனால் கர்நாடகம் அதற்கு எதிராக விளைநிலப்பரப்பை அதிகரித்து 9 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் சாகுபடிக்காக காவிரி நீரைப் பயன்படுத்தி வருகிறது. பெங்களூர் உள்ளிட்ட நகரங்களுக்கான குடிநீர் தேவைக்கு 23 டிஎம்சி காவிரி நீர் தேவை என்று கர்நாடகா சொல்வது மிகையானது" - என்று புள்ளி விவர ஆதாரங்கள் அனைத்தையும் தமிழகம் கொடுத்தும்கூட, கர்நாடகத்தின் அடாவடிகளையும் அண்டப் புளுகைப் பற்றியும் உச்ச நீதிமன்றம் எந்தக் கேள்வியும் எழுப்பவில்லை. காவிரியில் நீரின்றி டெல்டா மாவட்டங்களின் விவசாயமும் விவசாயிகளும் தமிழகத்தின் பொருளாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதை முக்கிய பிரச்சினையாக உச்சநீதிமன்றம் கருதவுமில்லை. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மதிக்காததோடு, காவிரி ஆணையத்திலிருந்தும் வெளியேறி இந்திய இறையாண்மைக்கு எதிராக கர்நாடக முதல்வர் செயல்பட்ட போதிலும், அவர்

மீது மைய அரசோ, உச்சநீதி மன்றமோ எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை. காவிரிப் பிரச்சினையை மீண்டும் தள்ளிப் போடு வது, பேச்சுவார்த்தை நடத்தச்சொல்வது, வாய்தா போடுவது என்ற நரித்தனத் தோடுதான் உச்ச நீதிமன்ற மும் அணுகுகிறது.



தஞ்சை பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிடும்
காவிரி உரிமை மீட்புக் குழுவைச் சேர்ந்த விவசாயிகள்

நடப்பு சாகுபடி பருவத் தில் கர்நாடகத்தில் தென் மேற்குப் பருவமழை 40 சத வீத அளவுக்குக் குறைந்த தாக கர்நாடகம் கூறியதை ஏற்று, அந்த 40சதவீதத் தைக் கழித்துக் கொண்டு 2012 அக்டோபர்வரைதரவேண்டிய பாக்கி 52.8 டிஎம்சி தண்ணீரைத் தருமாறு தமிழகம் கேட்ட போதிலும், இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீரைக் கொடுக்க மறுத் தது கர்நாடகம். கர்நாடக அணைகளில் அப்போது 80 டிஎம்சி அளவுக்குத் தண்ணீர் இருந்தபோதிலும், காவிரி கண்காணிப்புக்குழுவோ, ''கர்நாடக அணைகளில் உள்ள தண்ணீர் இருப்பு விவரம் எங்களிடம் இல்லை; தமிழகதில் சாகுபடி பருவக்காலம் எது என்பது தங் களுக்குத் தெரியாது'' என்றெல்லாம் கர்நாடகத்துக்குச் சாதமாக அப்பட்டமாகப் புளுகியது.

டெல்லியில் கடந்த டிசம்பர் 7-ஆம் தேதியன்று நடந்த காவிரி கண்காணிப்புக் குழு கூட்டத்தில், டிசம்பர் மாத இறுதிக்குள் நடுவர் மன்றத் தீர்ப்பு அரசிதழில் வெளி யிடப்படும் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அரசிதழில் வெளியிடுவதென்பது சட்ட ரீதியான ஒரு நடவடிக்கைதானே தவிர, அதை கர்நாடக அரசு செயல் படுத்துமா, செயல்படுத்தாவிட்டால் மைய அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பற்றி எந்த முடிவும் இல்லை. மறுபுறம், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அர சிதழில் வெளியிட கர்நாடக அரசு எதிர்ப்பு தெரிவிப்ப தால், இது குறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோ சித்து முடிவு செய்ய வேண்டியுள்ளதால், தீர்ப்பை அரசி தழில் வெளியிடுவதில் சிக்கல் உள்ளதாகக் கூறி மீண்டும் மைய அரசு இழுத்தடிக்க முயற்சிக்கிறது. நதிநீர் பிரச் சனைகளைத் விசாரித்து தீர்வு காண்பதற்கு, ஏற்கெனவே சிறப்பு நீதி மன்றத்துக்கு இணையான தகுதியுடைய தீர்ப் பாயங்கள் உள்ள நிலையில், புதிதாக நிரந்தரத் தீர்ப்பாயம் அமைக்கச் சொல்லி காவிரி விவகாரத்தை மீண்டும் இழுத்தடிக்கத் துடிக்கிறது.

பணியில் இறந்த போலீசார் குடும்பங்களுக்கு உடனடியாக இரண்டிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வரை நிவாரணமாகத் தரும் ஜெயா அரசு, காவிரியில் நீரின்றி சாகுபடி செய்ய முடியாமல் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளுக்குக் கருணை அடிப் படையில்கூட நிவாரணம் அளிக்கவில்லை. கடந்த டிசம் பர் 21 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய அ.திமு.க. எம்.பி.க்கள் தமிழகத்தில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் எதுவுமில்லை என்று அயோக்கியத்தனமாகக் கூறியுள்ளனர். காவிரியில் நீரின்றி பயிர்கள் கருகியுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வை யிட்டு நிவாரணம் வழங்க முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கின்றனர், டெல்டா மாவட்டங்களின் விவசாயிகள். ஆனால் ஜெயலலிதாவோ, குஜராத் தேர் தலில் வெற்றி பெற்ற பயங்கரவாத மோடிக்கு வாழ்த்துத் தெரிவிக்க ஓடுகிறார்.

பிப்ரவரி இறுதிவரை தண்ணீர் தேவையாக உள்ள நிலையில் கடந்த டிசம்பர் 22 அன்று மேட்டூர் அணை மூடப்பட்டதால், பயிர்களை எப்படிக் காப்பாற்றுவ தென்று தெரியாமல் விவசாயிகள் பரிதவித்துக் கொண் டிருக்கின்றனர். விவசாயிகளின் தற்கொலைகளைத் தடுக் கும் வகையில் எவ்வித சிறப்புத் திட்டமும் ஜெயா அர சிடம் இல்லை. தற்போதைய நெருக்கடியான தருணத் தில், பயிர்கள் கருகிப் போனதால் ஏற்பட்டுள்ள நட்டத் துக்கும் இழப்புக்கும் மைய அரசுதான் பொறுப்பு என்று இடித்துரைத்து, மைய அரசிடமிருந்து இழப்பீடும் நிவா ரணமும் பெற்றுத்தரவும், மைய அரசை முடுக்கி அதனை நிர்ப்பந்திக்கவும் முன்வராமல் கடிதம் எழுதியதையும், தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் வெளிநடப்பு செய்ததையும் காட்டி, தன்னை தமிழினத்துக்காகப் பாடு படும் போராளியாக ஒளிவட்டம் போட்டுக் கொண்டு மலிவான அரசியல் நாடகத்தை நடத்துகிறார் ஜெயா.

கருணாநிதியோ, தனது கட்சியின் சார்பில் தனிப் பட்ட முறையில் மாண்டவர்களுக்கு நிவாரணம் அளித்து, தனக்கு டெல்டா விவசாயிகளின் மீது அக்கறை உள்ளதாகக் காட்டிக் கொள்கிறார். காவிரி விவகாரத்தில் மைய அரசை மிரட்டவும், கூட்டணியை முறித்துக் கொள் வோம் என்று காங்கிரசை நிர்ப்பந்திக்கவும் வாய்ப்புள்ள போதிலும் அடக்கி வாசிக்கிறார். காவிரி உள்ளிட்ட தமி ழகத்தின் நியாயவுரிமைக்கான கோரிக்கைகளுக்காகக் கூட, தமிழக அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் அணி திரண்டு போராடாமல், அடையாள எதிர்ப்பும், பிழைப்பு

வாத வாய்ச்சவடால் அடித்து சமரசமாகிப் போவதுமே வாடிக்கையாகிவிட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஓட்டுக்குத்தான் விவசாயிகள் தேவையாக உள்ளனரே தவிர, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயமும் விவசாயிகளும் தேவையில்லை என்பதுதான் ஆளும் கும்பலின் கொள்கையாக உள்ளது. ஏற்கெனவே டெல்டா மாவட்டங்களில் இறால் பண்ணைகளை உருவாக்கி விவசாயத்தை நாசமாக்கிய ஆட்சியாளர்கள், இப்போது மாற்றுப்பயிர்களுக்கு விவசாயிகள் மாற வேண்டும் என்று உபதேசிக்கின்றனர். விவசாயத்தையும் விளைநிலங்களையும் அழித்து ரியல் எஸ்டேட்டுகளாக மாற்றுவதும், கிழக்குக் கடற்கரைப் பகுதி முழுவதும் கார்ப்பரேட் கொள்ளைக்கான அனல் மின்நிலையங்களையும் அணு மின் நிலையங்களையும் அமைப்பதுதான் ஆட்சியாளர்களின் திட்டமாக உள்ளது.

உலக வங்கி- உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, தண்ணீரை வர்த்தகப் பொருளாகக் கருதி அதற்கு விலை நிர்ணயிக்க வேண்டுமென்பதுதான் மைய அரசின் கொள்கை. அதை எதிரொலிக்கும் வகையில், நீர் பயன்பாட்டு முறையை வலுப்படுத்த தண்ணீருக்குக் குறைந்த பட்சம் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று கர்நாடக முதல்வர் ஷெட்டர் கோருகிறார். தேசிய நீர்க் கொள்கையும் இதைத்தான் வலியுறுத்துகிறது. மொத்தத்தில் காவிரி நீரானது தமிழத்துக்கும் இல்லை, கர்நாடகத்துக்கும் இல்லை என்று விவசாயத்தை நாசமாக்குவதும், விவசாயிகளை விவசாயத்திலிருந்தே விரட்டுவதும், தண்ணீரை வியாபாரப் பொருளாக்கி விவசாயமே செய்ய முடியாத நிலையை உருவாக்குவதுமான மறுகாலனியாதிக்கக் கொள்கைகள் மூர்க்கமாக திணிக்கப்படுகின்றன.

தீவிரமாகிவரும் இம்மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராகவும், காவிரியில் தமிழகத்தின் நியாயவுரிமையை தொடர்ந்து மறுக்கும் மையஅரசுக்கும் உச்ச நீதிமன்றத்துக்கும் எதிராகவும் தமிழக மக்கள் போர்க்குணமிக்க போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தனது அதிகாரத்தைப் பயன்படுத்த மறுத்து நழுவிக் கொள்ளும் உச்ச நீதிமன்றமும் மைய அரசும் , தமிழகத்தில் எந்தவொரு அதிகாரத்தையும் செலுத்த விடாமல் தடுத்து, அவற்றின் அதிகார அமைப்புகளும் அலுவலகங்களும் செயல்படா வண்ணம் தொடர் முற்றுகைப் போராட்டங்களை நடத்தி நிர்ப்பந்திக்க வேண்டும். மைய அரசு மற்றும் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை ஏற்க மறுத்தும், மைய அரசுக்கு வரி கொடுக்க மறுத்தும் பெருந்திரளான மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து செல்ல வேண்டும். அத்தகைய விடாப்பிடியான தொடர் போராட்டங்கள்தான் வஞ்சிக்கப்படும் தமிழகத்துக்கு நியாயவுரிமையைப் பெற்றுத்தரும்.

● மணி

## மறுக்கப்படும் காவிரி! வஞ்சிக்கப்படும் தமிழகம்!!




**கா**விரி பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்து வைக்க மைய அரசு, உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட அதிகார அமைப்புகள் மறுத்து வருவதால், அப்பிரச்சினை கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக செக்குமாட்டைப் போல ஒரே பாதையில் சுற்றிச்சுற்றி வருகிறது.

கர்நாடகத்தின் அடாவடித்தனம் மற்றும் மைய அரசின் ஓரவஞ்சனையான அணுகுமுறைகளால் இந்த ஆண்டு குறுவை சாகுபடி கைவிடப்பட்டது; 14 இலட்சம் ஏக்கர் அளவில் பயிரிடப்பட்ட சம்பா பயிர்கள் கருகிவிட்டன. காவிரி டெல்டாவில் நடந்துள்ள விவசாயிகளின் தற்கொலைகள் நிலைமை எவ்வளவு மோசமடைந்து விட்டது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

இந்நிலையில், ‘‘ காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை உடனே அரசிதழில் வெளியிடு; தீர்ப்பின் படியும், தீர்ப்பின் இடர்ப்பாடுகால பங்கீட்டு முறையின் படியும் தமிழகத்திற்கு உரிய நீரை உடனே திறந்துவிட நடவடிக்கை எடு; விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30,000/- நட்ட ஈடு வழங்கு; விவசாயத்தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.15,000/- உதவித்தொகை வழங்கு’’ என்ற கோரிக்கைகளை முன்வைத்து தஞ்சை, திருவாரூர், பட்டுக்கோட்டை வட்டாரங்களில் செயல்படும் ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து கடந்த 17.12.2012 அன்று தஞ்சையில் கண்டன ஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ம.க.இ.க. மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன், பேராசிரியர் அரங்க.சுப்பையா உள்ளிட்டோர் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.

உழைக்கும் மக்கள் அனைவரும் குறிப்பாக விவசாயிகள், தொழிலாளிகள் ஒன்றுபட்டு இந்தப் போலி ஜனநாயக சட்ட வரம்புகளை உடைத்து வெளியே நின்று போராடுவதன் மூலம் மட்டுமே நமது உரிமைகளைப் பெறமுடியும் என்பதையும், இதற்கு மார்க்சிய-லெனினியப் புரட்சிப்பாதையில் அணிதிரள்வது ஒன்றுதான் ஒரே வழி என்பதை உணர்த்தும் வகையிலும் அமைந்திருந்தது ஆர்ப்பாட்டம்.

- பு.ஜ.செய்தியாளர்

## படிக்கட்டுப் பயணப் படுகொலைகள்:

# அரசே குற்றவாளி!

**பேருந்துப் படிக்கட்டுகளில் தொங்கிக்கொண்டு பயணம் செய்யும் மாணவர்களைச் சாகசக்காரர்கள் எனக் குற்றஞ்சுமத்துவது அநீதியானது.**

சென்னைக்கு அருகேயுள்ள பெருங்குடியில் கடந்த மாதம் 10-ஆம் தேதியன்று காலையில் சென்னை மாநகரப் பேருந்தும் சிமெண்ட் மூட்டைகளை ஏற்றி வந்த லாரியும் ஒன்றோடொன்று உரசிக் கொண்டதில், அப்பேருந்தின் படிக்கட்டில் பயணம் செய்துவந்த நான்கு இளம் மாணவர்களின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டது; மேலும் மூன்று மாணவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின் நல்வாய்ப்பாக உயிர் பிழைத்தனர்.

பதின் வயதைச் சேர்ந்த மனோஜ்குமார், விஜயன், பாலமுருகன், சேகர் என்ற இந்த நான்கு மாணவர்களின் சாவும் தமிழக அரசு பொதுப் போக்குவரத்தைத் தொடர்ந்து அலட்சியப்படுத்திவருவதன் விளைவாகத் தான் நடந்திருக்கிறது. வேண்டுமென்றே அலட்சியமாக நடந்துகொண்டு நான்கு உயிர்களைப் பறித்திருக்கும் தமிழக அரசு மீது கொலைக் குற்றம் சுமத்த வேண்டும். ஆனால், அரசு, முதலாளித்துவப் பத்திரிகைகள், போலீசு, நீதிமன்றம் என நம்மை ஆள்வோர் அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்துக் கொண்டு, இச்சம்பவத்தை ஏதோ எதிர் பாராமல் நேர்ந்துவிட்ட விபத்து போலவும், முக்கியமாக மாணவர்களின் சாகசக் கலாச்சாரத்தால் நேர்ந்துவிட்ட மரணமாகவும் சித்திரித்து, இறந்துபோன மாணவர்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த சென்னை மாணவர்களையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றிவிட்டனர்.

இந்தச் சம்பவம் நடந்தவுடனேயே, மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்து பள்ளி-கல்லூரிகளுக்குச் சென்று திரும்பும் ஏழை மாணவர்கள் மீது அக்கறை கொண்டவனைப் போல, பொது போக்குவரத்தில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த விசாரணையைத் தானே முன்வந்து தொடங்கியது, உயர் நீதிமன்றம். அவ்விசாரணையின்பொழுது, ‘‘இந்த விபத்து நடந்த பழைய மகாபலிபுரம் சாலையில் காலை 8 மணியிலிருந்து 9 மணிக்குள் 95 பேருந்துகளை இயக்குகிறோம். ஆனால், மாணவர்கள் எப்போதுமே கடைசிப் பேருந்தில்தான் பயணிக்கின்றனர். மேலும், அவர்கள் படிக்கட்டில் பயணம் செய்யவே விரும்புகின்றனர்’’ என வாதிட்டார், தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல் நவநீதகிருஷ்ணன்.

இது அடுக்கமாட்டாத பொய் என்பது தினந்தோறும் சென்னை மாநகரப் பேருந்தில் பயணம் செய்யும் ஒவ்வொரு மாணவனுக்கும், தொழிலாளிக்கும் தெரியும். ஆனால், ஏ.சி. காரிலேயே பங்களாவிலிருந்து நீதிமன்றத்துக்கும், அங்கிருந்து சீட்டுகிளப்புக்கும் பயணம் செய்யும் நீதிபதிகளுக்குத் தெரியவில்லை. எனினும், அவர்கள் புத்தியிலும் பதியும்படி சென்னை போக்குவரத்து தொடர்பாக சில புள்ளிவிவரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. ‘‘சென்னை மாநகரில் தினந்தோறும் 5,000 பேருந்துகளை இயக்குவதற்குத் தமிழக அரசு

சாகசத்திற்காக அல்ல, பள்ளி-கல்லூரிக்குப் போவதற்காகப் படிக்கட்டில் நின்று கொண்டு பயணம் செய்ய நேரிட்டதால் உயிரைப் பறிகொடுத்த (இடமிருந்து) விஜயன், சேகர், பாலமுருகன், மனோஜ்குமார்.





**''நாங்கள்லாம் உள்ளே போக ஆரம்பிச்சோம்னா கேர்ல்ஸ்ங்க, வயசானவங்க இவங்கள்லாம் ஃபுட்போர்டு அடிக்க வேண்டியிருக்கும்ணே. அடிக்கடி பசங்க ஃபுட்போர்டு அடிக்கிற மாதிரி பத்திரிகையில ஃபோட்டா போடுறீங்களே, காலியா இருக்குற பஸ்ல நாங்க ஃபுட்போர்டு அடிக்கற மாதிரி ஒரு போட்டாவை காண்பீங்க'' என நக்கீரன் இதழ் நிருபரிடம் ஜெயக்குமார், கார்த்திக் என்ற இரு மாணவர்கள் கேட்டுள்ளனர்.**

உரிமம் பெற்றிருந்தாலும், 3,300 பேருந்துகளை மட்டுமே இயக்குவதாகவும், இந்த 3,300-லும் 600 பேருந்துகள் தொழிலாளர் பற்றாக்குறையால் அடிக்கடி நிறுத்தப்படுவதாகவும்'' அந்தப் புள்ளிவிவரம் கூறியது. மேலும், காரப்பாக்கம், சிறுசேரி, பெருங்குடி, அஸ்தினாபுரம் பகுதிகளில் பேருந்துகள் இயக்கப்படுவது படுமோசம் என்றும் அம்பலப்படுத்தியது, ஹிந்து நாளிதழ்.

இதுவொருபுறமிருக்க, பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் குறைவான கட்டணத்தில் ஓடும் சாதாரணப் பேருந்துகள் அதிகமாக இயக்கப்பட்டன. ஆனால், கடந்த இரண்டு மூன்றாண்டுகளாக, போக்குவரத்துக் கழகத்தின் நட்டத்தைக் குறைப்பது என்ற பெயரில், அநியாயக் கட்டணமுள்ள டீலக்ஸ் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டு, வெள்ளை போர்டு பேருந்துகள் குறைக்கப்பட்டன. இலவச பஸ் பாஸ் வைத்துள்ள மாணவர்கள் இந்த வெள்ளை போர்டு பேருந்துகளைத் தவிர, டீலக்ஸ் பேருந்துகளில் ஏறக்கூடாது என்ற கெடுபிடியும் உருவாக்கப்பட்டது. இப்படிக் குறைவாகப் பேருந்துகள் இயக்கப்படுவதால், 73 பேர் (48 பேர் அமர்ந்துகொண்டும், 25 பேர் நின்றுகொண்டும்) மட்டுமே பயணம் செய்ய வேண்டிய பேருந்தில் நெரிசல் நேரங்களில் 150 பேர் வரை பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்தக் கூட்ட நெரிசல்தான் மாணவர்கள் மீதும் இளைஞர்கள் மீதும் படிக்கட்டுப் பயணத்தைத் திணிக்கிறது.

தனியார் பள்ளிகளில் படிக்கும் பணக்கார, நடுத்தர வர்க்க மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு கார், ஆட்டோ, டூவீலர், பள்ளிப் பேருந்து எனப் பல வாய்ப்புகள் உள்ளன. ஆனால், வீட்டிலிருந்து தொலைதூரத்திலுள்ள பள்ளிக்கும் கல்லூரிக்கும் போவதற்கு மாநகரப் பேருந்தை மட்டுமே நம்பியிருக்கும் ஏழை மாணவனுக்கு உயிரைப் பணயம் வைத்துப் படிக்கட்டில் தொங்க வேண்டியதுதான் விதிக்கப்பட்டிருக்கிறது. நிறுத்தத்தில் நிற்காமல் செல்லும் பேருந்துகளைத் துரத்திக்கொண்டு போய் ஏற வேண்டிய கட்டாயம் அவன் தலைக்கு மேல் தொங்குகிறது.

படிக்கட்டில் பயணம் செய்வது போக்குவரத்து விதிமுறைகளுக்கு எதிரானது; உயிருக்கே ஆபத்து ஏற்படுத்தக் கூடியது என்பது ஒவ்வொரு மாணவனுக்கும் தெரியாதா என்ன? ஆனால், நெரிசல் மிகுந்த நேரங்களில் இந்த விதிமுறையை மீறாமல், உயிரைப் பணயம் வைக்கும் சாகசத்தில் இறங்காமல் வேறென்ன செய்ய முடியும்?

''நாங்கள்லாம் உள்ளே போக ஆரம்பிச்சோம்னா கேர்ல்ஸ்ங்க, வயசானவங்க இவங்கள்லாம் ஃபுட்போர்டு அடிக்க வேண்டியிருக்கும்ணே. அடிக்கடி பசங்க ஃபுட்போர்டு அடிக்கிற மாதிரி பத்திரிகையில ஃபோட்டா போடுறீங்களே, காலியா இருக்குற பஸ்ல நாங்க ஃபுட்போர்டு அடிக்கற மாதிரி ஒரு போட்டாவை காண்பீங்க'' என நக்கீரன் இதழ் நிருபரிடம் ஜெயக்குமார், கார்த்திக் என்ற இரு மாணவர்கள் கேட்டுள்ளனர்.

படிக்கட்டில் பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் மாணவர்கள் மீது மட்டுமா சுமத்தப்படுகிறது? சென்னை நகரில் ஓடும் மின்சார ரயில்களில் நெரிசல் நேரங்களில் நடுத்தர வயதினர்கூடத் தொங்கிக்கொண்டு போவதைப் பார்க்க முடியும். நகர்ப்புறங்களிலிருந்து கிராமங்களுக்குச் செல்லும் பேருந்துகளில் படிக்கட்டில் மட்டுமல்ல, கூரை மீது உட்கார்ந்துகொண்டு பயணிகள் செல்வதையும் சர்வசாதாரணமாகப் பார்க்க முடியும். இவர்களையெல்லாம் சாகசம் செய்கிறார்கள் என மனம் போன போக்கில் குற்றஞ்சுமத்த முடியுமா?

அரசு, அருகாமைப் பள்ளிகளைத் தொடங்கி நடத்தினால் மாணவர்கள் படிக்கட்டில் தொங்கிக் கொண்டு பள்ளிக்கு வர வேண்டிய கட்டாயமும் நிர்பந்தமும் ஒழிந்துவிடும் - எனக் கல்வியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். லாரி இடித்து நசுங்கிச் செத்துப் போன இந்த நான்கு மாணவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களது குடும்பங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நகரத்தினுள் குடியிருந்து வந்தன. நகரத்தை அழகுபடுத்துவது, அடிக்கட்டுமானத்தை மேம்படுத்துவது, குடிசைகளை ஒழிப்பது - எனப் பல்வேறு சால்ஜாப்புகளைச் சொல்லி, அந்த நான்கு மாணவர்களின் குடும்பங்களை மட்டுமின்றி, ஆயிரக்கணக்கான அடித்தட்டு

மக்களின் குடும்பங்களை நகரத்திற்கு வெளியே துரத்தியடித்தது, அரசு.

இப்படி அரசால் துரத்தியடிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்துவரும் செம்மஞ்சேரி, பெருங்குடி, கண்ணகி நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் பள்ளிக்கூடம், மருத்துவமனை, போக்குவரத்து - என எந்தவொரு வசதியும் செய்து தரப்படவில்லை. இதனால் இங்கு வசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ள குடும்பங்கள் வேலைக்கும், கல்விக்கும் பல கிலோமீட்டர் பயணம் செய்து நகரத்தின் மையத்திற்கு வந்து போவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

இந்த உண்மைகளையெல்லாம் உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஏறெடுத்துப் பார்க்கவோ, காது கொடுத்துக் கேட்கவோ தயாராக இல்லை. மாறாக, ‘‘பேருந்து படிக்கட்டில் இரண்டு முறைக்கு மேல் பயணம் செய்தால், பள்ளி, கல்லூரியை விட்டு மாணவனை நீக்க வேண்டும்’’ என அதிரடியாகத் தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர். நீதிபதிகள் என்றால் மெத்தப் படித்த அறிவாளிகள் என நம் மீது ஒரு கற்பிதம் திணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களோ குரூரமும் கோமாளித்தனமும் நிறைந்த பாசிஸ்டுகள் என இந்த உத்தரவின் மூலம் தங்களைத் தாங்களே அம்பலப்படுத்திக் கொண்டுவிட்டனர்.

● குப்பன்

அருகாமைப் பள்ளிகளைத் தொடங்கியிருந்தால், சாதாரணப் பேருந்துகளின் எண்ணிக்கையையும் தரத்தையும் மேம்படுத்தியிருந்தால், சென்னையில் மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்து வரும் படிக்கட்டு பயணத்தையும் அதனால் ஏற்படும் அநியாயச் சாவுகளையும் ஒழித்துவிட முடியும். ஆனால், தனியார்மயம்-தாராளமயம் என்ற பொருளாதாரக் கொள்கை இந்த இரண்டுக்குமே எதிராக இருக்கிறது. தனியார் பள்ளி முதலாளிகளின் இலாபத்திற்காக அரசுப் பள்ளிகள் ஒழிக்கப்படுகின்றன. இந்தியாவிற்குள் நுழைந்துள்ள பன்னாட்டு மோட்டார் கம்பெனிகளின் விற்பனையை அதிகப்படுத்துவதற்காக, பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவது கைகழுவப்படுகிறது.

பொதுப் போக்குவரத்தை ஒழித்துக் கட்டி வரும் தனியார்மயம்-தாராளமயம்தான் மனோஜ்குமார், விஜயன், பாலமுருகன், சேகர் என்ற இந்த நான்கு மாணவர்களின் உயிரைக் குடித்திருக்கிறது; இந்தத் தனியார்மயம்-தாராளமயம்தான் மாணவர்களின் இலவசக் கல்வி உரிமையைப் பறித்து வருகிறது. இந்தத் தனியார்மயம்-தாராளமயம்தான் விவசாயத்தை நாசப்படுத்தி, விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளி வருகிறது; இந்தத் தனியார்மயம்-தாராளமயம்தான் தொழிலாளர்களின் உரிமைகளையும், வேலை வாய்ப்பையும் தட்டிப் பறிக்கிறது; வறுமையையும் ஏழ்மையையும் தீவிரப்படுத்துகிறது. எனவே, இந்த நான்கு மாணவர்களின் மரணத்தை ஏதோ தனித்ததொரு அசம்பாவிதம் போலப் பார்க்க முடியாது; கூடாது என உணர வேண்டும்.

## மினி பேருந்தா? மரண ஊர்தியா?



கடந்த டிசம்பர்-3 அன்று இரவு, கோத்தகிரியிலிருந்து கொட்டகம்பை என்ற ஊருக்குப் புறப்பட்ட மினி பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள்; 50-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். கோத்தகிரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை அளிப்பதற்கேற்ப போதிய அடிப்படை வசதிகள் இல்லாததால், குற்றுயிரும் கொலையுயிருமாய் கிடந்தவர்களை அருகிலுள்ள கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

இந்த மினி பேருந்துகளை அதிவேகத்தில் இயக்கச் சொல்லி நிர்பந்திக்கும் முதலாளிகளின் இலாபவெறியே, நடைபெற்ற விபத்துக்கும் உயிர்ப்பலிக்கும் காரணம் என்பதை அம்பலப்படுத்தியும், இதுபோன்று அடிக்கடி விபத்துக்களை ஏற்படுத்தி வருகின்ற ‘‘மினி பேருந்துகள் அனைத்தையும் அரசுடைமையாக்கு! கோத்தகிரி அரசு மருத்துவமனையின் தரத்தை உயர்த்து!!’’ என்ற கோரிக்கைகளை முன்வைத்தும் பகுதி உழைக்கும் மக்களிடம் பிரச்சாரம் செய்து, 07.12.2012 அன்று ஒருநாள் பகுதி அளவிலான வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்தது, இப்பகுதியில் செயல்பட்டு வரும் நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கம்.

முதலில் முழுநாள் கடையடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தருவதாகத் தெரிவித்த கோத்தகிரி வட்டார அனைத்து வியாபாரிகள் சங்கத் தலைமை, மினி பேருந்து முதலாளிகளின் அழுத்தம் காரணமாக கடையடைப்புக்கு தந்த ஆதரவை பின்னர் விலக்கிக்கொண்டது. வியாபாரிகள் சங்கத் தலைமையை அம்பலப்படுத்தி உடனடியாக பிரசுரம் தயாரித்து அனைத்து வியாபாரிகளிடமும் வினியோகித்து முழு நாள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவைத் திரட்டியது, நீ.அ.தொ.சங்கம்.

வியாபாரிகள் சங்கத் தலைமை கடைகளைத் திறக்குமாறு மிரட்டல் விட்ட போதிலும், அதிகாரவர்க்கமும் போலீசும் நீ.அ.தொ.சங்கம் நக்சலைட் அமைப்பு என்று பீதியூட்டிய போதிலும் வணிகர்கள் முழுநாள் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவளித்தனர். மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், விபத்தில் பலியானோர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் வியாபாரிகள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

நீ.அ.தொ.சங்கத்தின் நியாயமான கோரிக்கைகள் இப்பகுதிவாழ் உழைக்கும் மக்களின் பேராதரவைப் பெற்ற முழக்கமாக மாறியிருக்கிறது. இவ்விபத்துக் குறித்து இதுவரை வாய்திறக்காத ஓட்டுக்கட்சிகளையும் வேலை செய்ய வைத்திருக்கிறது, இப்போராட்டம்.

– தகவல்: நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கம், கோத்தகிரி.

## சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு:

# எதிர்த்தரப்பின் யோக்கியதை என்ன?

**சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு நுழைவதைத் தடுக்க எதிர்த்தரப்பை நம்புவது, மண்குதிரையை நம்புவதற்கு ஒப்பானதாகும்.**

இந்திய நாடாளுமன்றம் என்பது வெற்று அரட்டை மடம்; ஜனநாயகத்துக்கான தேசிய முகமூடி; நாட்டையும் மக்களையும் அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு அடகு வைக்கும் துரோகிகள்தான் ஓட்டுக்கட்சிகள் - என்பதை சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டுக்கான வாக்கெடுப்பு விவாதம் மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை ஆதரிப்பதென்பதுதான் ஓட்டுக் கட்சிகளின் முடிவாக இருந்தது. எனினும், இந்த நாடகத்தை எப்படித் திறமையாக நடத்துவது என்பதில்தான் அவர்களிடையே வேறுபாடு நிலவியது. சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு விவகாரத்தில், எந்த ஓட்டுக்கட்சி எந்த நிலையை எடுக்கும் என்பதும், ஓட்டெடுப்பின் முடிவு எப்படி அமையும் என்பதும் கிட்டத்தட்ட எல்லோரும் அறிந்த விசயம்தான். இந்நிலையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதம் என்ற பெயரில் தலா இரண்டு நாட்களுக்கு ஒரு ஜனநாயகக் கேலிக்கூத்து நடந்துள்ளது.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை எதிர்க்கும் தீர்மானம் மக்களவையில் வாக்கெடுப்புக்கு வந்தபோது, அரசுக்கு எதிராக 218 வாக்குகளும், ஆதரவாக 253 வாக்குகளும் கிடைத்தன. 545 எம்.பி.க்களைக் கொண்ட அவையில் அன்று 471 உறுப்பினர்கள் மட்டுமே வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். முலயம் சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சியும், மாயாவதியின் பகுஜன்சமாஜ் கட்சியும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. மைய அரசைக் காப்பாற்றவும் தாங்களும் எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளவும் வெளிநடப்பு செய்தன. மாநிலங்களவையில், மைய அரசின் முடிவுக்கு எதிராக 102 வாக்குகளும், ஆதரவாக 123 வாக்குகளும் பதிவாகின. இங்கேயும் சமாஜ்வாதி கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்பு செய்தது. பகுஜன் சமாஜ் கட்சியோ ஆட்சியைக் காப்பாற்ற மைய அரசை ஆதரித்து வாக்களித்தது. மக்களவையில் 35 வாக்குகளும், மாநிலங்களவையில்21 வாக்குகளும் கூடுதலாகப் பெற்று இத்தீர்மானம் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு அனுமதிக்கப்பட்டு விட்டது.

நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல், அரசே நிர்வாக ரீதியாக இம்முடிவை எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்பதே உலக வங்கியின் - ஏகாதிபத்தியங்களின் கட்டளை. இருப்பினும் எதிர்க்கட்சிகள் இதற்கு எதிர்ப்பு காட்டி நாடகமாடியதால் இப்படியொரு ஜனநாயக நாடகமாட வேண்டியிருந்தது. இது ஆளும் காங்கிரசு கூட்டணிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சாதகமாகவே அமைந்துள்ளது. நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் தான் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டைக் கொண்டு வந்துள்ளோம் என்று நியாயவாதம் பேச கைக்கூலி மன்மோகன் அரசுக்கு வாய்ப்பாகிவிட்டது. இன்று நாடாளுமன்றத்தில் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை எதிர்ப்பதாக நாடகமாடிய கட்சிகள்,



நாளை ஆட்சிக்கு வந்தால், நாடாளுமன்றமே இப்படியொரு முடிவை எடுத்துள்ளதால் அதை உடனடியாக மாற்ற முடியாது; நாடாளுமன்றமே மீண்டும் இதை நிராகரித்தால்தான் மாற்ற முடியும் என்று கூறிக் கொண்டு, வேறு வழியின்றி சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டைத் தொடர வேண்டியிருக்கிறது என்று நியாயவாதம் பேசுவதற்கும் வாய்ப்பாகி விட்டது.



வால்மார்ட் நிறுவனம் சென்னை - வானகரத்தில் கட்டிவரும் கட்டடம்

அந்நிய முதலீட்டை நான் ஆதரிக்க மாட்டேன், வியாபாரிகளுக்கு எதிரான நிலையை தி.மு.க. எப்போதும் எடுக்காது என்று உறுதியளித்த கருணாநிதி, மதவாத ஆட்சி வரவிடாமல் தடுக்க காங்கிரசை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று பல்டி அடித்தார். கருணாநிதி ஒரு வாரத்தில் பல்டி அடித்தார் என்றால், மாயாவதி இரண்டே நாட்களில் பல்டியடித்தார். மாயாவதியின் பகுஜன்சமாஜ் கட்சியினர், வாக்கெடுப்பின் போது வெளிநடப்பு செய்து மன்மோகன் அரசைக் காப்பாற்றினர். ஆனால், மாநிலங்களவையில் அக்கட்சி வெளிநடப்பு செய்யவில்லை. அப்படிச் செய்தால் அரசுக்கு எதிரான வாக்குகள் அதிகமாகி நெருக்கடி ஏற்படும் என்பதால் அங்கு மைய அரசுக்கு ஆதரவாக அவரது கட்சியினர் வாக்களித்துள்ளனர். ''சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டை எதிர்த்து, எங்கள் எதிர்ப்பை அவையில் பதிவு செய்தோம்'' என இக்கட்சிகள் கூறுவதெல்லாம் மக்களின் தலையில் மிளகாய் அரைத்த கதைதான்.

இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிக்க வேண்டுமென்று, தனது 2004 தேர்தல் அறிக்கையில் பகிரங்கமாக அறிவித்து ஆதரித்த கட்சிதான் பா.ஜ.க. இப்போது எதிர்ப்பதாக நாடகமாடும் பா.ஜ.க., வாக்கெடுப்பை நடத்தச் சொன்னதே தவிர, அந்நிய முதலீட்டைத் தடுக்க எவ்வித அக்கறையும் காட்டவில்லை. இந்த விவகாரத்தில் தப்பித்து நழுவிக் கொள்ளும் நோக்கத்துடன் தாழ்த்தப்பட்டோர்- பழங்குடியினரின் உயர்பதவிக்கான மசோதாவை அது முதன்மைப்படுத்தியது. நாடாளுமன்றத்தை முடக்கிக் கூச்சலிட்டதைத் தவிர, எந்த எதிர்க்கட்சியும் சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் சட்டத்தை ரத்து செய்ய துளியும் முயற்சிக்கவில்லை.

கடந்த பத்தாண்டுகளில் ரிலையன்ஸ், மோர், பார்தி முதலான உள்நாட்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் சில்லறை வர்த்தகத்தில் கால்பதிக்கத் தொடங்கின. குறிப்பாக, பார்தியும் வால்மார்ட்டும் கூட்டுச் சேர்ந்து சட்டவிரோதமாக சில்லறை வர்த்தகத்தில் நுழைந்தபோதிலும், எந்த ஓட்டுக் கட்சியும் இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடவில்லை.

நாடாளுமன்றத்தில் சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீட்டை எதிர்த்துக் கூச்சல்களும் வெளிநடப்புகளும் நடந்து கொண்டிருந்தபோதே, தமிழகத்தில் சென்னை-வானகரம் அருகே கிடுகிடுவென கட்டிடங்களை எழுப்பத் தொடங்கிவிட்டது பார்தி வால்மார்ட் நிறுவனம். அண்ணாநகர் -திருமங்கலத்தில் அலுவலகம் அமைத்து, கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் ஏறத்தாழ 2,500 சில்லறை வணிகர்களைத் தனது உறுப்பினர்களாக்கியுள்ளது. மற்றவர்களைவிட ஏறத்தாழ 30 சதவீதத்துக்கு விலை குறைவாகத் தருவதாக வணிகர்களிடம் பேரம் பேசி வருகிறது. சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு கூடாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா சவடால் அடித்துக் கொண்டிருக்கும்போதே இத்தனையும் நடந்து கொண்டிருக்கின்றன.

ஒரு கார்ப்பரேட் நிறுவனம், அதிகாரிகளையும் மக்கள் பிரதிநிதிகளாகிய எம்.பி.க்களையும் தங்களுக்குச் சாதகமாகச் செயல்பட வைக்கும் நடவடிக்கைகள் - ''லாபியிங்'' என்றழைக்கப்படுகிறது. அமெரிக்காவில் லாபியிங் சட்டரீதியாக அங்கீகரிக்கப்படுகிறது. அமெரிக்காவில், இந்த லாபியிங் நடவடிக்கைகளுக்காக எவ்வளவு பணம் செலவிடப்பட்டுள்ளது என்பதை ஒவ்வொரு நிறுவனமும் அரசுக்குக் காலாண்டுக்கொரு முறை அறிவிக்க வேண்டும். இதன்படி வால்மார்ட் நிறுவனம், கடந்த நான்காண்டுகளில் உலகெங்கும் 125 கோடி ரூபாய் செலவிட்டுள்ளதாகவும், இதில் இந்தியச் சந்தையில் நுழைவதற்கு லாபியிங் செய்யப்பட்டதை ஒரு அம்சமாகமாகவும் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவில் லாபியிங் நடவடிக்கைகளுக்கு வால்மார்ட் நிறுவனம் எவ்வளவு செலவிட்டது என்ற விவரம் வெளியிடப்படவில்லை. அரசுக்குத் தெரிவிக்கும் சட்டபூர்வ லாபியிங் செலவுகளைத் தவிர, இதர பல வழிகளிலும் எல்லா ஏகபோக நிறுவனங்களும் செயல்படும் நிலையில், வால்மார்ட் இந்தியாவில் எவ்வளவு செலவிட்டு எத்தனை எம்.பி.க்களை விலைபேசியுள்ளது என்பது கோடிரூபாய் கேள்வியாகவே நீடிக்கிறது.

தற்போதைய அரசியலமைப்பு முறையானது, தனியார்மய-தாராளமய கார்ப்பரேட் கொள்ளையைத் தீவிரமாக்கி, நாட்டு மக்களை மரணப் படுகுழியில் தள்ளு

வதை நோக்கமாகக் கொண்டுள்ள நிலையில், இந்த அரசியலமைப்புக்குள்ளாகவே தீர்வு கண்டுவிட முடியும், சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட முடியும் என்று சிறு வணிகர்கள் இன்னமும் நம்புகிறார்கள். ஓட்டுக் கட்சிகள் தொடர்ந்து துரோகமிழைத்த போதிலும், மண் குதிரைகளான அவற்றின் வெற்று வாக்குறுதிகளை நம்பி ஆற்றில் இறங்குகிறார்கள். ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து, நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே புதிய போராட்ட முறைகளை மேற்கொள்ளவும் அவர்கள் தயாராக இல்லை. இவையனைத்தும் சேர்ந்து இத்தகைய கேலிக்கூத்தை ஓட்டுக் கட்சிகள் திறமையாக நடத்துவதற்கு வாய்ப்பாக அமைந்து விட்டது.




சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு அனுமதிக்கப்படுவதை எதிர்த்து அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்புச் சங்கமும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும் இணைந்து திருச்சியில் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம்.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டுக்கான மசோதாவை நிறைவேற்றியுள்ள துணிச்சலில், வங்கித் துறையைச் சீர்குலைக்கும் வங்கிச் சட்டங்கள் திருத்த மசோதா(2012), பங்கு ஆதாயம் மற்றும் கடன்கள் மீட்புச் சட்டங்கள் திருத்த மசோதா( 2012) ஆகியவற்றை மன்மோகன் அரசு கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது. இதன் விளைவாக, இனி அரசுத்துறை வங்கிகளின் குடுமி தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களில் இரும்புப் பிடியில் இருக்கும். உள்நாட்டு தனியார் வங்கிகள் அனைத்தும் பன்னாட்டு ஏகபோக நிதி நிறுவனங்களின் கைகளில் சிக்கிக் கொள்ளும்.

இவை தவிர, தடா, பொடா சட்டங்களின் புதிய அவதாரமான பயங்கரவாத ''ஊபா'' (UAPA) சட்டத்திலும் புதிய திருத்தங்களை அரசு கொண்டுவந்துள்ளது. எந்தவொரு குடிமகனையும் பயங்கரவாதியுடன் தொடர்புடையவராகக் குற்றம் சாட்டிக் கைது செய்ய போலீசுக்கு வரம்பற்ற அதிகாரத்தை அளிக்கும் வகையில், ''ஊபா'' சட்டத்தில் கடுமையான விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒருபுறம், அந்நிய கார்ப்பரேட் நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கு தாராள அனுமதி; மறுபுறம், நாட்டு மக்கள் மீது ஏவப்படும் பாசிச கருப்புச் சட்டங்கள். அன்றைய பிரிட்டிஷ் காலனிய ஆட்சிக்கும், இன்றைய நாடாளுமன்ற போலி ஜனநாயக ஆட்சிக்கும் சாராம்சத்தில் வேறுபாடு இல்லாமல் போய்விட்டது. இந்நிலையில், நாடாளுமன்றத்தின் மூலமோ, ஓட்டுக்கட்சிகளை நம்பியோ தீவிரமாகிவரும் இத்தகைய பேரழிவுத் தாக்குதல்களை முறியடித்துவிடலாம் என்று சில்லறை வணிகர்களும் உழைக்கும் மக்களும் இனியும் காத்திருக்க முடியாது. கடைந்தெடுத்த துரோகிகளாகிவிட்ட ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து, நாடாளுமன்ற - சட்டமன்ற அரசியலுக்கு வெளியே மக்கள்திரள் புரட்சிகர போராட்டங்களைக் கட்டியமைப்பதன் மூலம் மட்டும்தான், மூர்க்கமான இத்தகைய மறுகாலனியத் தாக்குதலை முறியடிக்க முடியும்.

● தனபால்

# அறிவிப்பு

● புதிய ஜனநாயகம் இதழ் ஒவ்வொரு மாதமும் முதல் அல்லது இரண்டாம் தேதியில் சந்தாதாரர்கள் அனைவருக்கும் அஞ்சல்துறை மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு அனுப்பப்படும் இதழ்கள் அடுத்த ஐந்து வேலை நாட்களுக்குள் சந்தாதாரர்களுக்குக் கிடைத்துவிடக்கூடும். அவ்வாறு இதழ் கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் தமது சந்தா எண் மற்றும் முழுமையான வீட்டு முகவரியுடன் எந்த மாத இதழ் கிடைக்கவில்லை என்ற விவரத்தை எமது நிர்வாகத்திற்குக் கடிதம் வழியாகவோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ முறையாகத் தெரிவிக்க வேண்டு கிறோம். வாய்ப்பு இருப்பின், சந்தாதாரர் தமக்கு இதழ் கிடைக்கப் பெறாமல் தவறிப் போனதைத் தமது பகுதிக்குரிய அஞ்சலகத்திலும் முறையீடு செய்யலாம்.

● மின்-பணவிடை (e-mo) மூலம் தொகை செலுத்தும் சந்தாதாரர்கள், இதழ் அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரியினை வீட்டு எண், தெருப் பெயர், வாய்ப்பிருந்தால் குறிப்பிடத்தகுந்த அடையாள இடங்கள் (land mark), மிக முக்கியமாக அஞ்சல் குறியீட்டு எண் அடங்கிய முழு முகவரியினைத் தனியே அஞ்சல் அட்டையிலோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

● புதிய சந்தாக்கள், நடப்பிலுள்ள சந்தாவினைப் புதுப்பித்தல், சந்தா தொடர்பான முகவரி மாற்றங்கள் மற்றும் சந்தாதாரர்களுக்கு இதழ் கிடைக்காதது குறித்த புகார்கள் உள்ளிட்ட அனைத்தும் ஒவ்வொரு மாதமும் 20 தேதிக்குள்ளாக எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



விழுப்புரத்தில்...

கொண்டு சாதியை ஒழிக்க முடியாது என்றும் வன்னிய சாதிவெறிக் கட்சியான பா.ம.க. உள்ளிட்ட சாதிவெறி அமைப்புகளைப் புறக்கணித்து உழைக்கும் மக்கள் வர்க்கமாக அணிதிரள வேண்டியதன் அவசியத்தையும்'' வலியுறுத்திப் பேசினார்.

சென்னையில் 29.11.2012 அன்று ம.உ.பா.மையத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ம.உ.பா.மையத்தின் சென்னைக்கிளை பொருளாளர் வழக்குரைஞர் மில்ட்டன் தலைமையில் நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்தில், சென்னை உயர் நீதிமன்ற வழக்குரைஞர்கள் இரா.சங்கரசுப்பு, அ.அருள்மொழி, கிருஷ்ணகுமார்; எழுத்தாளர் வே.மதிமாறன், தருமபுரி மாவட்ட ம.உ.பா.மையத்தின் செயலர் வழக்குரைஞர் ஜானகிராமன், பு.ஜ.தொ.மு.வின் மாநிலப் பொருளாளர் தோழர் பா.விஜயகுமார் மற்றும் ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் சி.ராஜு ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

வன்னிய சாதிவெறியர்களின் தாக்குதலுக்குள்ளான கிராமமான நத்தத்திலிருந்து முருகன், அண்ணா நகரிலிருந்து அகஸ்டின் ஆகியோரின் நேருரை, அம்மக்களின் துன்பத்தை உணர்த்தியதோடு ஆதிக்க சாதிவெறி மீது காறி உமிழத் தூண்டியது. ம.உ.பா.மையத்தின் உண்மை அறியும் குழு அறிக்கையை தோழர்ராஜு வெளியிட, முருகன், அகஸ்டின் உள்ளிட்ட தாக்குதலுக்குள்ளான கிராம மக்களின் பிரதிநிதிகள் பெற்றுக்கொண்டனர்.

வன்னியர்கள் நிறைந்துள்ள விழுப்புரம், கடலூர் மற்றும் புதுச்சேரி மாநிலப் பகுதிகளில், பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு., மற்றும் வி.வி.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சார இயக்கத்தை, வன்னிய சாதி வெறியினர் சிலர் தடுக்க முனைந்த பொழுது, அதே சாதியைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் அச்சாதிவெறியர்களைத் தட்டிக்கேட்டதோடு, இப்புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரத்தை வரவேற்று ஆதரித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, கடந்த 3.12.2012 அன்று விழுப்புரம் இரயில் நிலையம் அருகே இப்புரட்சிகர அமைப்புகள் கண்டன ஆர்ப்பாட்டத்தையும் நடத்தின.

பு.மா.இ.மு.வைச் சேர்ந்த தோழர் மோகன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பு.மா.இ.மு.வின் விழுப்புரம் மாவட்டச் செயலர் செல்வகுமார், வி.வி.மு.வைச் சேர்ந்த தோழர் அம்பேத்கர், ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு ஆகியோர் கண்டன உரையாற்றினர். பெரியார் படத்தை வைத்துக்கொண்டு அவரது சாதி ஒழிப்புக்கெதிராக சத்திரிய குல வன்னியர் என ஆண்ட பெருமை பேசும் ராமதாசின் பித்தலாட்டத்தையும்; நாடே மீண்டும் காலனியாவதை எதிர்த்துப் போராடுவதற்குப் பதில் தாழ்த்தப்பட்டோரின் சொத்துக்களைச் சூறையாடும் வன்னிய சாதிவெறியின் கயமைத்தனத்தையும் முன்னணியாளர்கள் தமது உரையில் அம்பலப்படுத்தினர்.

செங்கொடிகளுடனும், முழக்கத்தட்டிகளுடனும் 600 பேர் வரை தோழர்கள் அணிதிரண்டு எழுப்பிய கண்டன முழக்கத்தால் ஈர்க்கப்பட்ட பெருவாரியான பகுதிவாழ் உழைக்கும் மக்கள் இறுதிவரை நின்று ஆதரித்தனர். இந்த ஆர்ப்பாட்டம் தொடங்குவதற்கு சற்று முன்பாக, தொலைபேசியில் மிரட்டல் விடுத்த பா.ம.க. புள்ளி கடைசிவரை ஆர்ப்பாட்ட இடத்திற்கு அருகில் கூட வரவில்லை.

விருத்தாசலம் பாலக்கரையில் 13.12.2012 அன்று ம.உ.பா.மையத்தின் கடலூர் மாவட்டக் கிளை சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் எழுத்தாளர்கள் இமையம், கரிகாலன், வழக்குரைஞர்கள் செந்தில்குமார், ஜானகிராமன், பு.மா.இ.மு. கடலூர் மாவட்ட அமைப்பாளர் தோழர் குழந்தைவேலு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர்-காப்பாளர் சங்கத்தின் மாநிலத்தலைவர் கோ.பாக்கியராஜ் மற்றும் ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

வழக்குரைஞர் ராஜு தனது உரையில், ''ராமதாசின் அரசியல் நோக்கத்திற்காக நடத்தப்பட்ட இந்த கொடூரத் தாக்குதலுக்கு வன்னியர்களே நீங்கள் சம்மதிக்கிறீர்களா? ஜீன்ஸ் பேண்டும், கூலிங்கிளாசும் போட்டால் வன்னியப் பெண்கள் மயங்குகிறார்கள் என சொந்த சாதிப் பெண்களை கேவலப்படுத்துகிறாரே ராமதாசு, நீங்கள் அதை ஏன் தட்டிக்கேட்கவில்லை?.... வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது எனப் புளுகுவதோடு, அதனைத் திருத்த வேண்டும் என்றும் கோரி, அனைத்து ஆதிக்க சாதிகளையும் ஒருங்கிணைக்கிறார். தமிழகத்தில் நிலவும் வன்கொடுமையில் 2% குற்றங்கள்தான் வழக்காகவே பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்படாத வன்கொடுமைக் குற்றங்களை ஆயிரக்கணக்கில் நாங்கள் காட்டுகிறோம்... அரசியலமைப்புச் சட்டத்தில் தீண்டாமை ஒரு குற்றமாகவே சட்டப்பிரிவு 17-இல் வரையறுக்கப்பட்டுள்ளதே, இதற்கு என்ன சொல்லப்போகிறார் ராமதாசு?... இன்னமும் தனிக்குவளை முறை இருக்கு. தனிச் சுடுகாடு இருக்கு. சமத்துவ வழிபாடு இல்லை. ஊர்த் தெருவில் தலித்துகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பார்களா? பஞ்சாயத்துத் தலைவராக தலித் சமமாக உட்கார முடியுமா?... ஒரே கல்லூரியில் படிக்கும் இளைஞர்கள்-மாணவர்களிடையே திடீரென்று சாதி பகைமை தூண்டப்பட்டு பிளவை, மோதலை ஏற்படுத்துவது ஆபத்தானது. ராமதாசின் இந்த திட்டத்தை நாம் அனுமதிக்கக் கூடாது, முறியடிக்க வேண்டும்'' என்று போராட அறைகூவினார் அவர். - பு.ஜ.செய்தியாளர்.


விருத்தாசலத்தில்...

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

தொழிலாளி வர்க்கத்தின் துடிப்புடன்...
தொடரும் கீழைக்காற்று...

# 36 ஆவது
# சென்னை புத்தகக் காட்சி

## 11.01.2013 - 23.01.2013

ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி மைதானம்
சென்னை.

வேலை நாட்கள் : பிற்பகல் 2 - இரவு 8.30
விடுமுறை நாட்கள் : காலை 11 - இரவு 8






















முற்போக்கு நூல்களுக்கு ஒரு முகவரி...

கீழைக்காற்று

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2. ☎: 044 - 28412367